Koviloor Digital Library

நினைத்த வரம் தரும்

தெய்வம் ஒண்டர் லேண்ட்

A:15529

"கோயில் கலை அறிஞர்"

டாக்டர் வ.தேனப்பன்

M.A., Ph.D., P.G.D.H.E., C.J., C.I.A., D.G.T.,

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-2

தெய்வம் ஒண்டர் லேண்ட்

அன்பளிப்பு
முனைவர் ஆறு. அழகப்பன்
தமிழ்ச் சுரங்கம்

"கோயில் கலை அறிஞர்"
டாக்டர் வ. தேனப்பன்
M.A., Ph.D., P.G.D.H.E., C.J., C.I.A., D.G.T.,
தமிழ்ப் பேராசிரியர்,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி,
தேவகோட்டை.

KOVILOOR ANDAVAR
A. No. 15529
223
LIBRARY, KOVILOOR



தேன் வள்ளியம்மை பதிப்பகம்
தெய்வம் ஒண்டர் லேண்ட்,
வயிரவன்பட்டி ஆர்ச் சமீபம்,
பிள்ளையார்பட்டி. 630 207.
செல் : 94431 - 34961, 98424 - 34961, 98428 - 34961.

Koviloor Digital Library

தெய்வம் ஒண்டர் லேண்ட்
(சுற்றுலாப் பயணிகளுக்கான
அருங்காட்சியக விளக்கக் கையேடு)

முதற் பதிப்பு:
ஜூன் 2004

பதிப்புரிமை பதிப்பகத்தாருக்கே

முகப்பு வண்ணப்படம்:
தேன் வள்ளியப்பன்

அச்சும் அமைப்பும்:
தெய்வம் உடனடி ஆப்செட் அச்சகம்
6, மல்லிகைத் தெரு,
புது பஸ் ஸ்டாண்டு தெற்கு,
காரைக்குடி 630 001.

தாள் : மேப்லித்தோ

பக்கம் : 56

விலை : ரூ.15

நூல்கள் கிடைக்கும் இடம் :
தேன் வள்ளியம்மை பதிப்பகம்
தெய்வம் ஒண்டர் லேண்ட்,
வயிரவன்பட்டி ஆர்ச் சமீபம்,
பிள்ளையார்பட்டி. 630 207.
செல் : 94431 - 34961, 98424 - 34961, 98428 - 34961.

Koviloor Digital Library

3-2



"தெய்வம் அற்புத உலகம்" பிறந்த கதை

எல்லாம் வல்ல தெய்வத்தின் திருவருளால் "ஒன்பது நகரக் கோயில்கள்" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றேன். என் வாழ்க்கையில் நேர்ந்த தெய்வீகத் திருப்புமுனை இது.

சிறுகதைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த என்னை, ஒன்பது நகரக் கோயில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யுமாறு தடுத்து ஆட்கொண்ட பேரறிஞர்கள் இருவர். ஒருவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தராக விளங்கிய டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். இரண்டாமவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள். இவர்கள் இருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

எனது ஆய்வு நூலைப் பாராட்டிச் சென்னை எம். ஏ. சிடி. அறக்கட்டளையினர் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் விருதான ரூ 25,000 ஐப் பரிசாக அளித்தனர். அத்தொகையைக் கொண்டு கோயில் கலைக் கண்காட்சியினை நடத்தினேன்.

கோயில் சிற்பங்கள் ஒவ்வொன்றும் தத்துவக் கவிதையாக அமைந்து நல்வாழ்க்கைக்கான வழிகளையும் ஆன்ம முன்னேற்றத்திற்கான மலைப் பாதையையும் சுட்டிக் காட்டி நம்மை உயர்த்துவதைக் கண்காட்சியில் உணர்த்தினேன்.

அந்தக் கண்காட்சியைப் பார்த்துப் பாராட்டிய பலரும், அதை ஒரு அருங்காட்சியகமாக (மியூசியமாக) உருவாக்குமாறு பரிந்துரை செய்தனர்.

Koviloor Digital Library

அதனைக் கேட்ட என் மனைவி தேன் வள்ளியம்மையும் மகன்கள் தேன் வள்ளியப்பன், தேன் சொக்கலிங்கம், மருமக்கள் வ. அபிராமி, சொ. அலமேலு ஆகிய ஐந்து பேரும் சேர்ந்து, தங்கள் வாழ்க்கையின் லட்சிய சாதனையாக இந்த அருங்காட்சியகத்தை உருவாக்கத் திட்டமிட்டனர். ஒரு டாக்டர் பட்ட ஆராய்ச்சி நூல், ஒரு அருங்காட்சியகமாக வளர்ந்த கதை இது தான்.

உலகத்தின் முதல் குடைவரைக் கோயிலை அப்படியே தத்ரூபமாகக் கட்டிக் காட்டுவது என்பது ஒரு சாதனை தான்! அந்த உண்மையை விளக்குவதற்காக உலகத்தில் உள்ள வித்தியாசமான விநாயகர் சிற்பங்களையெல்லாம் உருவாக்குவது என்பது மிகக் கடினம் தான். அதனோடு விநாயகர் புராணச் சிற்பங்கள் அனைத்தையும் தத்துவ விளக்கமாக அமைப்பது என்பது பெரிய சாதனைதான்! அத்தனை சிற்பங்களையும் மகாபலிபுரம் சிற்பக் கல்லூரியில் படித்த ஹரிஹர ஸ்தபதி அவர்கள் தலைமையில் உருவாக்கியுள்ளனர்.

"உலக விநாயகர்கள் ஒருங்கிணைந்த ஆலயம்!" என்று தினத்தந்தி (2.5.2004) இதழ் பாராட்டியுள்ளதையே தெய்வம் அற்புத உலகத்திற்கான I.S.I தர முத்திரைச் சான்றிதழாக ஏற்றுக்கொள்கிறேன்.

இச்சாதனையைப் பாராட்டிக் "கோயில் கலை மாமணி" என்ற விருதினைத் தமிழ்நாடு சினிமா கலை மன்றம் வழங்கியுள்ளது.

இந்து மதத்திலுள்ள தெய்வ தத்துவங்கள் படிக்கப்படிக்க இனிப்பவை. பார்க்கப் பார்க்கப் பரவசப்படுத்துபவை. அந்தத் தெய்வீகப் பரவசத்தைத் தெய்வம் அற்புத உலகத்தில் நிறைவாகக் காணலாம்.

கவியரசு கண்ணதாசனின் "அர்த்தமுள்ள இந்து மதம்" புத்தகங்களைப் படித்தாலே போதும்; இந்து மதத்தை முழுமையாகக் கண்டு கொள்ள முடியும். தெய்வம் அற்புத உலகத்தைப் பார்த்தாலே போதும், இந்து மதத்தை முழுமையாக உணர்ந்து கொள்ளமுடியும்.

ஒவ்வொரு சிற்பமும் ஒரு உருவகம்; ஒரு தத்துவக் கதை சொல்லும் காவியம். அவற்றைத் தொகுத்து ஒரு கலைக் களஞ்சியமாகத் தருவதே இந்நூலின் நோக்கம்.

இந்த இப்பிறவியில் எல்லா இன்பங்களையும் பெற்று, நிறைவாக வாழ்ந்து, வீடுபேறு அடைய வழிகாட்டுவதே தெய்வம் அற்புத உலகத்தின் உயர்வான நோக்கம் ஆகும்.

வாருங்கள்! வந்து பாருங்கள்!
வாழ்வை வசந்தமாக மாற்றிக்கொள்ளுங்கள்!

நன்றி!

பிள்ளையார்பட்டி
27-6-2004

அன்பிற்கினிய,
வ. தேனப்பன்.

Koviloor Digital Library



வாழ்க்கைத் தத்துவம் அறிய வாருங்கள்!

சிவகங்கை மவாட்டத்தில் பிள்ளையார்பட்டிக்கு அருகில் உள்ள வைரவன்பட்டியில் அமைத்துள்ள நூதனப் பூங்கா இது.

பிள்ளையாரைப் பற்றிய 100% செய்திகளை அறிந்து கொள்ளும்படி அற்புத உலகம் தகவல்களைச் சான்று ஆதாரங்களோடு அள்ளித் தருகிறது. உலகத்தின் முதல் குடைவரைக் கோயிலான அதன் மாதிரி வடிவம் அருங்காட்சியகத்தில் கட்டப்பட்டுள்ளது.

பிள்ளையார்பட்டிக்கு தற்போது 2500 வயது ஆகிறது! ஆமாம். கி.மு. 5 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு அங்கு கிடைத்துள்ளது. அக் கல்வெட்டுச் சான்றும் அங்கு நகல் கல்வெட்டாக உள்ளது.

ஒரு கல்வெட்டு எழுத்தை வைத்து அதன் காலத்தைக் கண்டு பிடிக்கக் கல்வெட்டு அறிஞர் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள்

Koviloor Digital Library

தயாரித்த காலவரிசையிலான கல்வெட்டு எழுத்து வளர்ச்சிப் பட்டியலும் அவ் உண்மையைச் சரிபார்த்துக் கொள்வதற்காக வைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார்பட்டியின் பழைமையான பெயர் எருக்காட்டூர். எருக்கம் பூவைத்தான் விநாயகரும் சிவபெருமானும் விரும்புவார்கள். அதனால் அக்காலத்தில் எருக்கஞ் செடிகளே அதிகமாகக் காணப்பட்டமையால் எருக்காட்டூர் எனக் காரணப் பெயர் பெற்றது.

கல்வெட்டில் உள்ள செய்தி இது தான்: எருக்காட்டூர்க் கோன் பெருந்தச்சன்.

தச்சன் என்றால் சிற்பி. பெருந்தச்சன் என்றால் சிற்பிகளின் தலைவன். கோன் என்றால் அரசன். ஒரு சிற்பி தன் சிற்பத் திறமையால் பெருந்தச்சன் ஆகிறான். சிற்ப நுட்பங்கள் மூலம் வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறும் போது தான், சிற்பிகளுக்குள்ளே அரசனாகிறான். அவ்வாறு இரண்டு விருதுகளை- இரண்டு கிரீடங்களை இந்தச் சிற்பி எவ்வாறு பெற்றார் தெரியுமா? எது புண்ணியம்? எது பாவம்? என்று பகுத்தறியும் திறன்மிக்க மனம் படைத்தவன் மனத்தன் எனப்பட்டான். அதுவே நாளடைவில் மனுஷன் மனிதன் என ஆயிற்று. அம் மனம் பூப்போல இருந்தால் பிறருக்கு மணத்தையும் தேனையும் காயையும் கனியையும் விதையையும் கொடுக்க முடியும். ஆனால் பல நேரங்களில் நம் மனம் கல்லாகவே இறுகிப் போய் விடுகிறது. பிறருக்கு எவ்விதத்திலும் நன்மை செய்ய முன் வருவதில்லை.

அப்படிப்பட்ட கல்லான மனத்துக்குள் கடவுளைத் தியானத்தால் எழுந்தருளச் செய்தால், நாம் தனக்காக வாழும் மனித மிருக நிலையிலிருந்து பிறருக்காக வாழும் தெய்வ நிலைக்கு உயர முடியும் என்பதற்காகவே மலைப் பாறையைக் குடைந்து ஒரு கோயிலைக் கட்டி. அதனுள் நான்கு தெய்வங்களை வடிவமைத்துள்ளார் அச் சிற்பச் சக்கரவர்த்தி.

கல்லில் அவர் எழுதிய கவிதைச் சிற்பங்களை நோக்க நோக்க மனம் நெக்குருகி மகிழ்கிறது!

அவசர யுகத்தில் வாழும் நாம், தெய்வீகச் சிற்பங்களில் உள்ள தத்துவ நுட்பங்களைப் பொறுமையாக உற்று நோக்கிச் சிந்தித்து அதன் உண்மையைக் கண்டுணர்ந்து மகிழவேண்டும்.

"அணிசெய்காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவி உள்ளம் காண்கிலார்!"

என வருத்தப்படுவார் பாரதியார். அதே போல ஒவ்வொரு சிற்பத்திலும் ஆழ்ந்திருக்கும் தத்துவ நுட்பத்தை நாம் உணராமல் செல்லக் கூடாது.

Koviloor Digital Library

கட்டுரைக்கு முன்னுரை எழுதுவது போலக் குடைவரைக் கோயிலின் முகப்பில் அடி முடி காணாநாதரின் சிற்பத்தை வடிவமைத்துள்ளார். கடவுளின் பெருமைகளை அளந்தறிந்து சொல்ல முடியாது. எனினும் என் சிற்றறிவுக்கு எட்டிய வரை சொல்ல முயற்சி செய்கிறேன் என அவையடக்கமாக இச்சிற்பத்தை முதலில் வடிவமைத்துவிட்டுப் பிறகு மலையைக் குடைந்து கோயிலை அமைத்துள்ளார்.



"வேழ வெண் கொம்பு ஒசித்த மாலும்
விளங்கிய நான் முகனும்
சூழ எங்கும் தேட ஆங்கோர்
ஜோதியுள் ஆகி நின்றாய்!
கேழல் வெண்கொம்பு அணிந்தபெம்மான்
கேடில்லாப் பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாய்
நெடுங்களம் மேயவனே!"

என்ற தேவாரப் பாடலைப் பாடித் திருமாலினாலும் பிரம்மாவினாலும் தேடிக் காணமுடியாத திருவடியை உடையவனே போற்றி! என மனதார வழிபட்டு அம் மாதிரிக் கோயிலின் உள்ளே நுழைகின்றோம்.

கிழக்குத் திசை நோக்கிய பிரதான மூர்த்தியாகச் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதன் கருவறையைத் தத்துவ விளக்கமாக அமைத்த சிற்பிக்கு, ஞானமிகு கோன் பெருந்தச்சன் என்று மூன்று கிரீடங்களைச் சூட்டலாமா எனத் தோன்றும். காரணம், அக் கருவறையைக் கஜப் பிருஷ்ட அமைப்பாக வடிவமைத்திருப்பதே ஆகும்!



Koviloor Digital Library

உலகத்திற்கு வந்த பேரழிவுகள் இரண்டு. ஒன்று பாற்கடலிலிருந்து வந்த ஆலகால விஷம். அதைப் பிரதோஷப் பிரசாதமாகச் சிவபெருமான் அருள் மனத்தால் ஏற்றுக்கொண்டார்.

இரண்டாவது பேரழிவு, கஜமுகாசுரன் என்னும் யானை வடிவெடுத்த அரக்கனால் வரவிருந்த அழிவு. அவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு பெரிய யானை உருவெடுத்து வந்த போது. அவனது ஒரு காலின் கீழ் மிதிபட்டு 500 கிராமங்கள் அழியவிருந்தன. அதனால் பயந்த மக்கள் அனைவரும் காப்பாற்றுமாறு இறைவனிடம் சரணாகதி அடைந்தனர். அவ்வளவு பெரிய தோற்றத்தில் அவன் வந்தாலும், சிவபெருமான் விஸ்வரூபம் எடுத்து அவன் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்திக் கொண்டார் அவன் உயிரற்று அவர் பின்னே விழுந்தான். அம் மாட்சியினைச் சொல்லி, அவ்வளவு பெரிய துன்பத்திலிருந்தெல்லாம் மனிதர்களைக் காத்தவர் நம்மையும் உறுதியாகக் காப்பார் என்ற நம்பிக்கை தோன்றும் வண்ணம் குடைவரைக் கோயில் கருவறையை யானையின் பின்பகுதி போல அமைத்துள்ளார்.

இந்த கஜப் பிருஷ்ட அமைப்பினால் கோயிலின் அமைப்பு லிங்க வடிவாக மாறிவிடுகிறது. கோயில் ஒரு லிங்கம். உள்ளே உள்ள திருவீசர் இரண்டாவது லிங்கம். நம் மனத்தில் தியானத்தால் பிரதிஷ்டை செய்யும் ஆத்ம லிங்கம் மூன்றாவது லிங்கம். இப்படி மூன்று லிங்கங்களை ஒரே இடத்தில் காணும் பேறு கிடைப்பதாலேயே மும்மடங்கு இன்பம் பொங்கிப் பெருகுகிறது.

இயற்கை வழிபாடே உண்மையான ஆன்மீக வழிபாடு. பஞ்சபூத வழிபாடே நம் வழிபாடாகும். அதனாலேயே மர வழிபாட்டை லிங்க வழிபாடாகக் கைக்கொண்டு வருகிறோம். கந்து என்றால் மரம். கந்தழி என்பது மரத்தின் சிதைந்த வடிவமாகும். கந்தழி வழிபாட்டையே தொல்காப்பியரும் குறிப்பிடுகின்றார்.

இங்குள்ள சிவலிங்கத்தின் பெயர் திருவீசர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஒருபொருளை ஒருவர் கேட்டுக் கொடுத்தால், அது கொடை எனப்படும். ஒருவர் மனத்துக்குள் நினைத்துக் கொண்டிருப்பதை அவர் வாய்விட்டுக் கேட்காமலிருக்கும் போது, தானாக மனமுவந்து கொடுப்பது ஈகை எனப்படும். அப்படி நினைத்த வரம் தருவதாலேயே ஈசன் எனப்பெயர். நினைத்த பொருளைப் பணமாகவோ, பொருளாகவோ தராமல், நமக்கு உழைக்கும் திறனைத் தந்து, அதன்மூலம் பொருளீட்டி, அப்பொருளை அடையச் செய்வதே திருவருள் எனப்படும் இப்படித் திருவருளை வாரி வாரி வழங்குவதால் அவரைத் திரு+(வருள்) ஈசர்= திருவீசர் எனப் புகழ்ந்து கூறினர்.

Koviloor Digital Library

யாரை வழிபட வேண்டும் என்ற கேள்விக்கு இயற்கையை லிங்க வடிவில் வழிபட வேண்டும் என்கிறார் சிற்பி.

எப்படி வழிபட வேண்டும்? என்ற கேள்விக்குத் தேசி விநாயகப் பிள்ளையாரைப் போலத் தியானம் செய்து வழிபட வேண்டும் என்று பதில் கூறுகிறார்.



தேசி விநாயகப் பிள்ளையார் என்று கல்வெட்டுகள் கூறும் விநாயகரையே இன்று நாம் கற்பக விநாயகர் என்று வழிபட்டு வருகிறோம். அவர் கையில் லிங்கத்தை ஏந்தி வடக்குத் திசையை நோக்கித் தவம் செய்கின்றார். கோரிக்கை நிறைவேறும் வரை உயிரையும் தியாகம் செய்ய எண்ணுபவர்களே வடக்கு நோக்கித் தியானம் செய்வார்கள். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பதால் உயிர்த்தியாகம் செய்வதாக அவர் தியானம் செய்யும் கோலத்தில் காணப்படுகிறார். இச்சிற்பம் சொல்லும் செய்தி: "தியானம் செய்யுங்கள்!" இதனால் மனித பலத்துடன் தெய்வ பலமும் கூடும். இதை விளக்கவே தியானம் செய்யும் விநாயகர் ஒரு வீரக் கழலையும், தியானம் செய்து முடித்த விநாயகர் இரண்டு வீரக் கழலையும் அணிந்திருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்கின்றனர்.

"தியானம் செய்வதன் பலன் என்ன?" என்ற மூன்றாவது கேள்விக்கும் விடை கூறியுள்ளார் அந்த மும்முடிச் சிற்பி.

தியானம் செய்தால் சங்கர நாராயணர் திருக்காட்சியைக் காணலாம்! இதை முதலில் பார்க்க விரும்பியவர் யார் தெரியுமா? சாட்ஷாத் பார்வதி தேவிதான்.

அர்த்த நாரீஸ்வரர் கோலத்தைப் பார்த்ததும், இந்த ஆசை வந்தது பார்வதி தேவிக்கு! ஆசைப்படலாம்; தவறில்லை. அதை அடைய நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் இக்கோலத்தைக் காணத் தவம் புரிய வேண்டும் என்றார் சிவபெருமான். உடனே பார்வதி தேவி சங்கரன் கோவிலில் கோமதி என்ற பெயரில் பெண்ணாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடுந் தவம் புரிந்து பார்த்த அரிய காட்சி இது!

Koviloor Digital Library

இச் சிற்பத்தின் வலப்பகுதியில் சிவபெருமானின் பாதி உருவமும் இடப் பகுதியில் திருமாலின் பாதி உருவமும் ஒருடலாகக் காட்சியளிக்கிறது சிவன் பாகத்தின் அருகில் சண்டிகேசுவரரும் திருமால் பாகத்தின் அருகில் கருடாழ்வாரும் ஆசி பெறுகின்றனர்.

தியானம் செய்த பிறகு இச் சிற்பத்தின் திருவடிகளைத் தொட்டு வணங்க வேண்டும்.

சுவாமி சிற்பங்களைத் தொடலாமா என்று கேள்வி கேட்டால், முப்போதும் திருமேனி தீண்டுவார் நாயனார் கதையையும் குங்கிலியக் கலைய நாயனார் கதையில் ஒரு பெண் பக்தை சிவலிங்கத்திற்கு மாலை சூட்டிய செய்தியையும் பதிலாகக் கூறுகின்றனர் அற்புத உலகத்தினர்.

சிவன் திருவடியையும், திருமால் திருவடியையும் தொட்டு வணங்குவதால் என்ன பயன்? சிவன் நெற்றிக்கண் உடையவர். தவறு செய்ய விடமாட்டார். சிறந்த - சரியான முடிவினால் நமக்குச் சஞ்சலம், கவலை ஏற்படாது. இதனால் துன்பம் வராது. இன்பம் மட்டுமே விளையும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற திருநாவுக்கரசரின் வாக்கு பலிப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

திருமால் காக்கும் தெய்வம். எனவே நமது பேரன் பேத்திகள் திருமணம் வரை பார்த்து, எல்லாப் பேறுகளையும் இந்தப் பிறவியிலேயே பெற்று, நம்மைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் உதவிக் காத்த பிறகு தூங்கிக்கொண்டிருக்கும்போது உயிர் பிரியும். நம் பிள்ளைகளுக்கும் சிரமம் இல்லை. அடுத்துப் பிறப்பும் இல்லை. இப்படி மரணமில்லாப் பெரு வாழ்வைப் பெறச் சங்கர நாராயணரின் திருவடி வழிபாடு பெரிதும் உதவும்.

திருவள்ளுவரைப் போல இந்த எருக்காட்டூர்ச் சிற்பியும் வாழ்க்கைத் தத்துவங்களையெல்லாம் கரைத்துக் குடித்த ஞானியாக இருப்பார் போலும்! அதனாலேயே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்க்கைக் குறிக்கோள்கள் நான்கும் சதுரப்பாடாக - சரியாக அமையவேண்டும் என்பதற்காகத் தூண்களின் அடிப்பகுதியையும் மேற்பகுதியையும் சதுரமாக வடிவமைத்துள்ளார். நல்வாழ்க்கை அமைய யார் துணை நிற்பார்கள் என்ற கேள்விக்கு விடையாக எண் குணத்தானான இறைவன்தான் தூணாகத் துணையிருப்பான் என்பதை உருவகமாக விளக்கியுள்ளார்.

இறைவனின் எண் குணங்கள் என்னென்ன? நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், சூரிய மண்டலம், சந்திரமண்டலம், நம் உயிர் என்னும்

Koviloor Digital Library
ஆன்மா ஆகிய எட்டு வடிவில்தான் இறைவன் ஒளிர்கின்றான்.

அந்த எட்டுக் குணங்களும் ஒருங்கு கூடும் இடத்தில் தியானம் செய்தால் விரைவில் இறைநிலை கைகூடும். இதற்காகவே எட்டுப்பட்டைப் பிரமிடு வடிவில் தியான மண்டபத்தை அற்புத உலகத்தில் கட்டியுள்ளனர்.

பஞ்சபாண்டவர்கள் தவம் செய்த மலைச் சாரலில் இத் தியான மண்டபம் அமைந்திருப்பதனால் இங்கு தியானம் கற்க வருவோருக்கெல்லாம் விரைவில் மனஒருமை கை கூடுகிறது. வெளி நாட்டவர்களும் இங்கு நெடு நேரம் தியானம் செய்கின்றனர்.

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்தின் குரு பரம்பரையைச் சேர்ந்த பாபாஜியின் பாராட்டைப் பெற்ற தியான மண்டபம் இது. இங்கு அரைமணி நேரத்தில் ஞான யோக தியானப் பயிற்சியினைக் கற்பிக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஐந்து நிமிடம் தியானம் செய்தாலே போதும். 23 மணிநேரம் 55 நிமிடங்கள் நமக்கு மன நிம்மதி கிடைக்கிறது. நோ டென்ஷன். நோ பி.பி. நோய்களுக்கெல்லாம் நோ என்ட்ரீ, வெற்றிகளுக்கெல்லாம் ஃப்ரீ போர்ட் ஆகி விடுகிறது நம் வாழ்க்கை!

2500 ஆண்டுகளுக்கு முன் ஒரு தத்துவச் சிற்பி எழுதிய உருவகக் கவிதை, இன்று தெய்வம் அற்புத உலகத்தின் மூலம் நனவாகி இருக்கிறது!

Koviloor Digital Library



ஆதி விநாயகர்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவனாகிய சிவபெருமான், ஓம்கார வடிவமாகப் பெற்ற மைந்தனே விநாயகக் கடவுள் ஆவார்.

உலகத்தைத் தன் திருவயிற்றில் தாங்கிப் பெற்றெடுத்த தாயும் ஆனவர் விநாயகப்பெருமான். உலகத்தைக் கருவாகத் தாங்கியதாலேயே அவருடைய திருவயிறு மிகப் பெரிதாகக் காணப்படுகிறது.

உலகம் தோன்றியதும் வழிபடப்பட்ட முதல் தெய்வம் விநாயகரே என்பதைத்தான் அருகம்புல் அர்ச்சனை குறிப்பிடுகிறது.

அருவம் என்றால் உருவமற்றது என்று பொருள். உண்மையில் இறைவனுக்கு உருவம் கிடையாது. உருவமற்ற ஒரு பொருளை மக்கள் எவ்வாறு கண்டுகொள்ள முடியும் என்பதற்காகவே ஓம்கார வடிவத்தைப் போன்ற யானை முகத்தானை முதலில் வணங்கினர்.

உயிரினங்களில் முதன்முதலாகத் தோன்றியது புல் தான். அது உருவமில்லாத தெய்வத்திற்கு (அருகனுக்கு) அர்ச்சனைப் பொருளானதால் அருகன் புல் எனப் பெயர் பெற்றுப் பின்னர் அருகம் புல் எனப் பேச்சு வழக்கில் மாறியது.

தெய்வத்தை மனக் கோயிலில் காண்பவர்களுக்கு நோய் ஒன்று கூட வாராது. பிறவி நோய் உட்படப் பல நூறு நோய்களை வரவிடாமல் தடுப்பதே அருகம் புல்லாகும்.

கல்வெட்டுச் சான்றினாலும், சிற்ப அமைப்பினாலும் பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர் சிற்பமே உலகத்திற்கு முதல் விநாயகர் - ஆதிவிநாயகர் சிற்பம் என்பதை மெய்ப்பிக்கலாம்.

Koviloor Digital Library

இச்சிற்பத்திற்கு முன்பு தோன்றிய ஓவியங்கள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

விநாயகர் ஓவியங்களுள் காலத்தால் முதன்மையானது ஹரப்பா (மொஹஞ்சதரோவில்) கிடைத்த ஓவியமே ஆகும். இது ஒரு விநோத ஓவியம் என்று உலக அளவில் பாராட்டப்படுகின்றது. இந்த ஓவியத்தில் தான் முதன் முதலில் யானைத் தலையையும் தந்தத்தையும் உடைய ஒரு விநோத உருவ அமைப்பு தொடங்கியுள்ளது.

இந்த ஓவியத்தில் இடம் பெற்றுள்ள ஒரு விலங்கின் முன்னங் கால்கள் காளை மாட்டின் கால்களைப் போல் உள்ளன. பின்னங்கால்கள் புலியின் கால்களைப் போல் உள்ளன. பசுமாட்டின் கொம்பும், மரக்கிளைகளும் காணப்படுகின்றன. மரவழிபாடும் விலங்கு வழிபாடும் இருந்தமையை இவ்வோவியம் தெரிவிக்கின்றது என்பார்கள் சில ஆராய்ச்சியாளர்கள்.

யானைத் தலையுடைய - பல்வேறு உயிர்த் தொகுதிகளின் - கணங்களின் அதிபதி என்பதைக் குறிப்பதற்காகத் தோன்றிய முதல் கணபதியின் வடிவம் இது என்பதே உண்மையாகும்.

விநாயகரின் வடிவ வளர்ச்சியை மேற்கு ஈரானில் காணப்படும் ஒரு செப்பேட்டு ஓவியம் நன்கு விளக்கிக் கூறுகிறது. யானைத் தலையுடன் ஒரு போர்த் தளபதியைப் போல அவ்வுருவம் காணப்படுகிறது. ஐந்து தலைப் பாம்பு ஒன்று அதன் காலடியில் காணப்படுகிறது. ஒற்றைத் தலைப் பாம்பினை அவ்வுருவம் லாவகமாக வலது கையில் கைப்பற்றியுள்ளது. இடது கையில் ஒரு மயிலிறகு காணப்படுகிறது.

ஐம்புலன்களின் ஒடுக்கத்தை விளக்குவதாக இந்த ஓவியம் அமைந்துள்ளது.

இதனை அடுத்து மத்தியப் பிரதேசம் உதயகிரியில் உள்ள குடைவரைக் கோயில் விநாயகர் சிற்பமும், ஆப்கானிஸ்தான் காபூலில் உள்ள விநாயகர் சிற்பமுமே ஆராய்ச்சியாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை முறையே கி.பி 4, கி.பி. 5 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை.

பிள்ளையார்பட்டியில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகரின் சிற்ப அமைதியும், தமிழி எழுத்துக் கல்வெட்டுச் சான்றுகளும் கி.மு. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

Koviloor Digital Library

இது நாள் வரை உலகிற்குத் தெரியாமல் இருந்த இந்த உண்மை இப்போது தெரியவந்துள்ளது. உலகத்தில் முதன் முதலில் தோன்றிய முழுமையான விநாயகர் வடிவம் பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகரின் வடிவமே என்பதில் எள்அளவும் சந்தேகமில்லை.

இக் கற்பக விநாயகரின் பழைமையையும் பெருமையையும் உணரவேண்டுமானால், நாம் உலகெங்கும் உள்ள விநாயகர் சிற்பங்களோடு ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும். அதற்காகவே "தெய்வம் அற்புத உலகத்தில்" ஒரு அருங்காட்சியகம் (மியூசியம்) கட்டப்பட்டுள்ளது.

இதில் இந்தியா (மத்தியப் பிரதேசம் குஜராத், வாதாபி,) ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, பர்மா, நாகாலாந்து, தாய்லாந்து, இந்தோனேஷியா, கம்போடியா, அமெரிக்கா, பாலித்தீவு, ஈரான், ஜப்பான், திபேத், நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ள விநாயகரின் பல்வேறு வகையான சிற்பங்கள் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மத்தியப் பிரதேச விநாயகர்

மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ள உதயகிரி குடைவரைப் பிள்ளையார், பிள்ளையார்பட்டியில் உள்ளதைப் போன்றே இரண்டு கைகளுடன் காணப்படுகிறார். வலது காலை மடித்து வைத்த கோலத்திலும், இடது காலைத் தொங்கவிட்ட வண்ணத்திலும் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். வலது கையில் மகாபாரதம் எழுதுவதற்காகத் தனது தந்தம் என்றும் பாராமல் உலக மக்கள் படித்தறியும் இன்பமே பெரிதென்று கருதித் தந்தத்தை உடைத்து எழுதிய கருணைப் பெருவெள்ளக் காட்சி கண்களைக் குளமாக்குகின்றன. - ஆனந்தப் பரவசத்தால். பிறருக்காக வாழுங்கள் என்ற தெய்வ தத்துவ விளக்கமாக வலது கரம் விளங்குகிறது.

இடது கையில் மோதகத்தினை ஏந்தியுள்ளார். மோதகம் என்பது பரிபூரணம் எனப்படும் சுத்த இன்பமாகும். வாழ்க்கை முழுவதும் இன்பமயமானதே என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார். எப்படி வாழ்க்கை

Koviloor Digital Library

முழுவதும் இன்பமயம் ஆகும் எனச் சிந்திப்பவர்களுக்கு அந்த பகவான் அதே சொல்லைப் பகு பதமாகப் பிரித்துப் பார்க்கச் செய்கிறார். மோதுகின்ற அகம்தான் மோதகம்! எந்தத் தடைகளையும் துன்பங்களையும் எதிர்த்துத் தாக்குகின்ற மன தைரியத்தைத் தான் மோதுகின்ற அகம் என்கின்றோம். விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் தானே விக்னேஸ்வரர். அவரை நம் உள்ளத்திற்குள் பிரதிஷ்டை செய்தால். நிச்சயம் எதையும் தாங்கும் இதயத்தைத் தருவார். வெற்றிமீது வெற்றி வந்து சேரவேண்டுமானால் விநாயகரை நம் உள்ளமென்னும் மத்தியப் பிரதேசத்தில் எழுந்தருளச் செய்யவேண்டும். அப்போது துன்ப மலையை உடைத்து நொறுக்கி, இன்பத் திருக்காட்சியை ஒவ்வொரு நாளும் தருவார்.

ஆப்கானிஸ்தான் விநாயகர்

ஆப்கானிஸ்தானிலும் குஜராத்திலும் சற்றேறக் குறைய ஒரே மாதிரியான விநாயகரின் வடிவம் வழிபடப்படுகிறது.

இரண்டு கைகளுடன் யக்ஷன் என்னும் தேவ கணத்துடன் காட்சியளிக்கின்றார். உயிரினங்களைக் கணங்கள் என்பார்கள். கைலாசத்தில் சிவபெருமானின் தொண்டர்களாக விளங்கும் தேவ கணங்களின் தலைவரே கணங்களுக்கான அதிபதி என்ற பொருளில் கணபதி எனப் பெயர் பெற்றார். உலக உயிர்களுக்கெல்லாம் தலைவராக இருந்து பாதுகாப்பவர் கணபதியே என்ற கருத்தினையே இச்சிற்பம் நுட்பமாகக் கூறுகிறது.

உலக உயிர்கள் வேண்டுவனவற்றை யக்ஷன் மூலமாக அள்ளித்தரும் அருட்கடலே விநாயகர் என்பது யக்ஷன் கையில் நிறைந்துள்ள பொருள் வளத்தால் தெரிகிறது. பக்தர்கள் கேட்டதைக் காட்டிலும் அதிகமாக அள்ளிக் கொடுக்கச் சொல்கின்றாரே என்ற அருள் தோய்ந்த வியப்பு, யக்ஷனின் அகல விழிப் பார்வையில் அழகாகத் தெரிகின்றது.

Koviloor Digital Library

விநாயகரின் மார்பில் நல்லபாம்பு ஒன்று நாகாபரணமாகக் காணப்படுகிறது. ஆதிகாலத்தில் மனிதர்கள் பகலில் விலங்குகளை வேட்டையாடினார்கள். இரவில் அவை மனிதர்களை வேட்டையாடின. சிங்கம், புலி, கரடி போன்ற விலங்குகளிடமிருந்து தப்புவதற்காக மரங்களில் பரண் அமைத்துத் தங்கினர். ஆதி மனிதனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடமும் கொடுத்து உதவிய தெய்வப் பிறவி மரங்களே என்பதால்தான் மரவழிபாடு தோன்றியது. அந்த மரம் ஆயிரம் வருடங்கள் ஆனால் கல்லாக மாறிவிடும். அந்தக் கந்தழியே (கந்து = மரம்) லிங்க வடிவமாக உருவெடுத்தது.

எந்த மரத்தின் கீழே பாம்புப் புற்று இருக்கிறதோ, அந்த மரத்தின் மேலே தான் ஆதி மனிதர்கள் தங்குவார்கள். இரவில் அவர்களைக் கொல்லவரும் விலங்குகள் பாம்புப் புற்றின்மீது கால்களை வைத்து ஏற முற்படும்போது நல்ல பாம்பு அவற்றைக் கொன்றுவிடும். இவ்வாறு பாம்பு மனிதனைத் துன்பத்திலிருந்து காத்தமையால் அதனைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர்.

திருப்புற்று ஊர் என்பதே திருப்புத்தூர் என ஆயிற்று. அங்கிருந்த மரமே, திருத்தளிநாதர் என்ற பெயரால் வழிபடப்படுகின்றது. தளி என்றால் மரம் என்று பொருள். இவ்வாறு புற்றிடம் கொண்ட ஈசனை வழிபடத் தொடங்கினர். ஸ்தல விருட்சங்களும் இவ்வாறு வழிபாட்டிற்கு வந்தன.

விஷமுள்ள பாம்பினை விநாயகப் பெருமான் ஏன் அணிந்தார் தெரியுமா? பிறர் உயிரைப் பறிக்கும் விஷம் தன்னிடம் இருந்தாலும், பாம்பு, தேவையில்லாமல் யாரையும் கொல்வதில்லை. அதனுடைய இரண்டாகப் பிளவு பட்ட மென்மையான நாக்கினால் தன்னைத் தீண்டியவரின் நாடித்துடிப்பை அறியும். பயத்தாலோ கோபத்தாலோ தன்னை அடிக்க முற்படுகிறார் எனத் தெரிந்தால்தான் தனது விஷப் பற்களுக்கு வேலை கொடுக்குமே தவிர, அனைவரையும் அது கொத்துவது இல்லை. தன்னை ஒருவன் காத்துக் கொள்ள வேண்டுமென்றால், ஒருவன் தனது சினத்தை - கோபத்தை வெளிப்படுத்தாமல் காத்துக்கொள்ள வேண்டும். தன்னை அடக்க முடியாத ஒருவன் எப்படி மற்றவர்களை அடக்க முடியும்? உலகத்தை வெற்றி கொள்ள முடியும்? எனவே வெற்றியின் பிள்ளையார் சுழியே, நம்மைச் சுழித்து நிற்கும் கோபப் பாம்பை அடக்குவதில் தான் இருக்கிறது.

உண்மையைச் சொல்வதென்றால் சினம் கொள்பவர்கள் சீக்கிரம் இறந்து விடுகிறார்கள். பொறுமைசாலிகளே பல்லாண்டு வாழ்கிறார்கள். வாழ்வின் வெற்றிக்குச் சீற்றத்தைக் குறைத்துக் கொண்டு புன்னகை பூப்பதே ஒரு தனி ஆபரணம் என்பதையே இந்த நாகாபரணம் கூறாமல் கூறுகிறது. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, என்று தானே வள்ளுவரும் கோபத்தை நன்கு ‘படமெடுத்துக்’காட்டியுள்ளார். எனவே நாம் கோபத்தை அடக்கிப் பிறருக்கு நல்ல குணத்தை வாழ்க்கை என்னும் யக்ஷன் மூலம் வழங்கினால் நாமும் கணபதி வடிவமாகலாம்.

Koviloor Digital Library



வாதாபி கணபதி

இயற்கை வடிவமாக - நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் என பஞ்சபூதமாக விளங்கும் இறை ஆற்றலுக்கு உண்மையில் குறிப்பிட்ட ஒரு உருவமோ, ஒரு பெயரோ, ஒரு ஊரோ கிடையாது. உலகம் எங்கிலும் நிறைந்திருப்பது அவ் இறை ஆற்றல் ஒன்றே.

உருவமில்லா இறைவன் எப்படி இருப்பார் என்பதை மக்களின் சிற்றறிவுக்கு எட்டுமாறு சொல்ல முற்பட்ட முனிவர்கள் அவனுக்கு 'இயக்கன்' என்று முதலில் பெயரிட்டனர். நம்மை, உலகை இயக்குபவன் அவன் தானே? பெண் சிற்பத்தை இயக்கி என்றனர்.

நம் வீட்டில் உள்ள மரப்பாச்சி பொம்மைகளின் உருவங்களே இவை. இந்த இயக்கனின் உருவத்திற்கும் வீரயுகக் காலத்தில் நடப்பட்ட நடுகல் வீரர் சிற்பத்திற்கும் அதிக வேறுபாடு இல்லாமையினால் ஓம் என்னும் மந்திர ஏட்டிலிருந்து பிறந்த யானைத் தலையுடைய விநாயகரின் சிற்பம் வழிபாட்டிற்கு உகந்தது ஆயிற்று.

ஓம் என்ற வடிவத்தையும் வலஞ்சுழி விநாயகரின் முக அமைப்பையும் ஒப்பு நோக்கினால் இந்த உண்மை புலனாகும்.

இயக்கனின் இரண்டு கைகளுடன் யானைத் தலை அமைந்திருந்தமையினால் முற்காலத்தில் விநாயகர் சிற்பங்களில் இரண்டு கைகளே காணப்பட்டன. பங்களாதேஷ், சீனா, தாய்லாந்து, இந்தோனேஷியா, ஈரான், கம்போடியா, அமெரிக்கா, பாலித்தீவு விநாயகர்கள் அனைவருக்கும் இரண்டு கைகளே காணப்படுகின்றன.

கடவுளுக்கு சக்தி அதிகம் என்பதை விளக்கப் பிற்காலத்தில் நான்கு கைகள், எட்டுக் கைகள், பத்துக்கைகள் எனப் பெரிதாக உருவகம் செய்யப்பட்டன. அவ்வாறு நான்கு கைகளைக் கொண்ட சிற்பமே வாதாபி கணபதி ஆவார்.

Koviloor Digital Library

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் வாதாபியை நோக்கிப் போருக்குச் சென்ற பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டர் நான்கு கைகளுடன் அமைந்திருந்த விநாயகர் சிற்பத்தைப் போரில் வெற்றி பெற்றதன் அடையாளமாகக் கொண்டு வந்தார். அதனை இன்றும் திருவாரூர் அருகில் உள்ள திருச்செங்காட்டங்குடி என்ற ஊரில் காணலாம்.

வாதாபியிலிருந்து கொண்டுவரப் பட்டமையினால் இவர் வாதாபி கணபதி எனப்பெயர் பெற்றார். இவர் தனது வலது மேற்கரத்தில் அங்குசத்தை ஏந்தியுள்ளார். மதம் பிடித்த யானையை அடக்குவதற்கே யானைப்பாகன் அங்குசத்தைப் பயன்படுத்துவான். வாழ்க்கை முறை தவறித் தறிகெட்டு ஓடும் போது இறை ஆற்றல் அங்குசமாக மாறி நம்மைக் காக்கும் என்பதே தத்துவ உண்மையாகும்.

இடது மேற்கரத்தில் பாசத்தினைக் கொண்டுள்ளார். பெற்றோரிடம் பணிவு, மனைவியிடம் அன்பு, குழந்தைகளிடம் பாசம், உலகத்தாரிடம் கருணை ஆகியனவற்றைப் பெருகச் செய்து வாழ்க்கையை ஒரு பாசப்பூந் தோட்டமாக மலர்விப்பார் விநாயகர் என்ற கருத்தையே பாசம் உணர்த்துகிறது.

வலது கீழ்க்கரத்தில் மோதகத்தினை ஏந்தியுள்ளார். இதற்கான விளக்கத்தை முன்பு பார்த்தோம். வாழ்வை உறுதிப்படுத்த மன வலிமையைத் தருவார். இடது கீழ்க்கரம் அபய முத்திரையில் அமைந்துள்ளது. அதனால் தன்னைச் சரணடையும் பக்தர்களை அவர் பாதுகாத்து உதவுவார் எனப் புரிந்து கொள்ள முடிகிறது.

சீனா விநாயகர்

விநாயகர் வழிபாடு உலகம் முழுவதும் பரவியிருப்பதனால் சீனாவிலும் இருகை விநாயகரைக் காண முடிகின்றது.

ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் கலாச்சாரமும் விநாயகர் உருவத் தோற்றத்திலும் ஆடை அணிகலன்களிலும் ஆயுதங்களிலும் வெளிப்படுகின்றன.

Koviloor Digital Library

சீன தேசத்து விநாயகர் பகுத்தறிவை உணர்த்தும் அங்குசத்தை மிகப் பெரிய வடிவத்தில் ஏந்திச் சிந்தனைச் சக்தியைத் தூண்டுகிறார். யானைபோல் மதம் பிடித்து வெறி கொண்டு அலையும் ஐம்புலன்களைப் பகுத்தறிவு என்னும் அங்குசம் கொண்டு அடக்குங்கள். நிம்மதியான வாழ்வு அமையும் என்பதை உருவகமாக எடுத்துக் கூறுகிறார்.

சீன விநாயகர் இடது கையில் பாசத்திற்குப் பதிலாக முள்ளங்கியை ஏந்தியுள்ளார். விநாயகர் விவசாயிகளின் தெய்வமாகப் போற்றப்படுகிறார். நல்ல விளைச்சலுக்கு விநாயகரின் அருள் மழை இன்றியமையாதது என்று நம்புகின்றனர். அந்த நம்பிக்கை நாற்றே பக்தியாகப் பழுத்துக் கனிந்து இன்ப விளைச்சலை அதிகப்படுத்துகிறது.

கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்கள் அனைத்தும் ஊட்டச்சத்து உணவுகளாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. அவ்வாறே அருகம்புல், வில்வம், துளசி ஆகியன மருந்தாகப் பயன்படுகின்றன.

பிள்ளையாருக்கு விருப்பமான அருகம்புல், கரும்புச் சாறு, முள்ளங்கி, மாதுளம் பழம் ஆகியன அற்புதமான மூலிகைகள் ஆகும். அதிலும் பெண்களுக்கு மிக அருமையான அமுதசுரபியே மாதுளம் பழமாகும் மாது உள்ளம் நலம் பெற உதவும் பழம் என்பதாலே அது, அப்பெயரைப் பெற்றுள்ளது. பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நான்கும் கலந்து உண்டால் எந்தக் குறைபாடும் தோன்றாது. விக்னமே இல்லாத வாழ்க்கைக்கு இவை அஸ்திவாரம் அமைக்கின்றன.

பலருக்கும் தெரியாத மாமருந்து முள்ளங்கி. உணவுக் குழலில் ஏற்படும் சிக்கல்கள், நீர்ப்பையில் ஏற்படும் கற்கள் ஆகியனவற்றைக் கரைந்தோடச் செய்யும் மருந்தே முள்ளங்கி. இதனைப் போன்றே வாழைத்தண்டு, சுரைக்காய், வெள்ளரிக்காய் ஆகியனவற்றை உண்டால் உணவுக் குழலில் எந்தச் சிக்கலும் வராது. கருணைக் கிழங்கினை வாரம் ஒரு முறை உண்டால் மூல நோய் வராது. புடலங்காய் அஜீரணத்திற்கான மருந்து, அவரைக்காய் நீரழிவு நோய்க்கான மருந்து, சுண்டைக்காய் எலும்புருக்கி நோய்க்கான மருந்து, வெண்டிக்காய் மூட்டு வலிக்கான மருந்து, பாகற்காய் இனிப்பு நோய்க்கான மருந்து, இவ்வாறு விவசாயத்தின் தெய்வமான விநாயகர் விளைவிக்கும் ஆச்சரியமான உண்மைகள் பலவாகும்.

Koviloor Digital Library

இந்தோனேஷியா விநாயகர்

விநாயகர் சிற்பங்களுள் மிக வித்தியாசமானது சிங்கமுக கணபதியாவார். இரண்டு யானைத் தலைகளையும் ஒரு சிங்க முகத்தையும் உடைய மும்முக கணபதி இவர். ரண மோட்ச கணபதி என வடமொழி வேதங்கள் இவரைப் புகழ்ந்து பாடுகின்றன. ரணம் என்றால் நோய். மோட்சம் என்றால் வீடு பேறு. சாதாரண நோய்களிலிருந்தும் பிறவி நோயிலிருந்தும் நம்மைக் காத்து வீடுபேறு அடையச் செய்கின்றார். வியாதிக் கிருமிகளை அப்புறப்படுத்துவதற்காகவே சிங்கமுக கணபதியாகக் காட்சியளிக்கிறார். வலது கையில் அங்குசமும் இடது கையில் பாசமும் உள்ளன.

விநாயகரின் பாதத்தில் பாம்பின் வால் பகுதி காணப்படுகிறது. அவரது இரண்டு கைகளிலும் இரண்டு பாம்புத் தலைகள் காணப்படுகின்றன. ராகு கேது தோஷங்களினால் ஏற்படும் வியாதிகளை இவர் கட்டுப்படுத்திக் காப்பாற்றுகிறார் என்பதாலேயே இரண்டு பாம்புகளை நாக ஆபரணமாக அணிந்துள்ளார்.

ரண மோட்ச கணபதியின் அருளால் உயிர்க்கொல்லியான பாம்பின் விஷமும், புற்று நோய்க்கான மருந்தாகி உயிர்காக்கும் அற்புதத்தை நாம் அறிவியல் ரீதியாகக் காண்கிறோம்.

வளமான குதிரையினை ஒரு பாம்பு கொத்துமாறு செய்கின்றார்கள் விஞ்ஞானிகள். அந்த விஷத்தை முறிப்பதற்கு மிக வேகமாகக் குதிரையின் ரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் எதிர்ப்பு சக்தியைத் தோற்றுவிக்கின்றன. அதை எடுத்துப் பக்குவப்படுத்திப் புற்று நோய்க்கும் தீராத பிற நோய்களுக்கும் மருந்தாகச் செலுத்துகின்றனர். இதனால் விஷத்திலிருந்தே விஷ முறிவு மருந்து கிடைக்கிறது.

விஷச் செடி என நாம் ஒதுக்கும் எருக்கம்பூவை அணிபவரல்லவா விநாயகர்? எனவே விஷத்தால் விஷத்தை முறிக்கும் விஷயத்தை அந்த விக்ன ஈஸ்வரரே வழங்குகின்றார்.

Koviloor Digital Library

இந்தோனேஷியாவில் ஆதிகாலத்தில் வழிபடப்பட்ட இச்சிற்பம் தற்போது அந்நாட்டு மியூசியத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. வேறு வடிவில் அமைந்த விநாயகர் சிற்பமே தற்போது அந்நாட்டு வழிபாட்டில் உள்ளது.

இந்தோனேஷியாவில் வெளியிடப்படும் அதிக பட்ச மதிப்புடைய ரூபாய் நோட்டு ரூ. 20,000 மதிப்புடையதாகும். அதில் விநாயகரின் உருவத்தையே வெளியிட்டுள்ளார்கள் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்தோனேஷியாவிலிருந்து வந்த சுற்றுலாப்பயணி ஒருவர் தெய்வம் அற்புத உலகத்தைப் பாராட்டி அன்பளிப்பாக அந்த விநாயகப் பணத்தினை அளித்துள்ளார்.

ஜப்பான் விநாயகர்

உலக விநாயகர்களில் விநோதமானவர் ஜப்பானில் வழிபடப்பெறுகின்ற இரட்டைப் பிள்ளையார்களே!

அதிக ஆயுள் பெற விரும்புவர்கள் "ஜோ ஜோ" எனப்படும் இம் முதிய தோற்ற விநாயகர்களை வழிபடுகின்றனர்.

ஆண் வடிவம் ஒன்றும் பெண் வடிவம் ஒன்றுமாகக் காணப்படும். இவ் இரட்டை விநாயகர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவித் தம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் பாணியில் இவர்களை வடிவமைத்துள்ளனர். ஜப்பானியர்களின் சராசரி வயது நூற்றி இருபது. நூற்றி இருபது வருடம் உடல் நலத்தோடு வாழமுடியுமா எனச் சந்தேகமாகக் கேட்டால், இன்றைய விஞ்ஞானம் இருநூற்று நாற்பது வயதுவரை கூட முதுமையே காணாமல் இளமையாக வாழலாம் என சந்தோஷமாகக் கூறுகிறது. "சயின்ஸ் டுடே" என்ற பத்திரிகை கூறும் நல்ல ஆலோசனைகளைக் கடைப் பிடித்தால் நாமும் இருநூற்றி நாற்பது ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழமுடியும்.

Koviloor Digital Library

ஜப்பான் விநாயகர்கள் என்ன செய்கின்றார்கள்? ஒருவரை ஒருவர் மனதார வாழ்த்துகின்றார்கள்!

"வாழ்க வளமுடன்!" என்று சொல்லுங்கள் நீங்கள் நீண்ட காலம் நிம்மதியாக வாழ்வீர்கள் என்று கூறுகின்ற அறிவுத் திருக்கோயிலின் ஆன்மீக குரு ஞானமிகு வேதாத்திரி மகரிஷியின் பொன்னான வாக்கு பொலிவு பெறுவதை நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

அது எப்படிப் பலிக்கிறது என்ற ரகசியம் உங்களுக்குத் தெரியுமா? "வாழ்க வளமுடன்" என்று சொல்லும் போது, நாக்கின் நுனிப்பகுதி மேல் அன்னப் பகுதியைச் சுகமாகத் தடவிச் செல்லும். இவ்வாறு தடவுவதால் உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கும். அதனால் உணவுப் பொருட்கள் அதிகமான அளவு செரிக்கப்படும். இதனால் உடல் பலமும், வாழ்த்துவதால் உள்ளத்தில் ஆன்ம பலமும் கூடும். இவை இரண்டும் இருந்தால் நோய்க்கு நோ என்ட்ரி போர்டு வைத்துவிடலாம். நோயற்ற வாழ்வுதானே குறைவற்ற செல்வம்? இதனால் ஆயுள் ரேகை கூடுமே தவிரக் குறையாது.

நீண்ட ஆயுள் வாழ விரும்புபவர்கள் கீழ்வரும் மூன்று சத்தியப் பிரமாணங்களை மட்டும் மனதாரச் செய்யவேண்டும்; கடைப்பிடிக்க வேண்டும்.

1. ரகசியம் என்பதே இருக்கக்கூடாது. உண்மையில், ரகசியத்தைப் பற்றிய ஒரு ரகசியம் என்ன தெரியுமா? உலகில் ரகசியம் என்பதே கிடையாது. "ரகசியம்! வெளியில் யாரிடமும் சொல்லி விடாதே!" என்று கூறினால், அடுத்த நிமிடமே அது ஆள்விட்டு ஆள் பறக்கும்; பூதாகர வடிவம் எடுக்கும். எனவே ரகசியம் என்ற பெயரில் எந்தத் தவறினையும் மறைத்து வைக்கக் கூடாது.

உலகம் முழுவதும் ஆண்டவனின் பார்வை நிறைந்துள்ளது. அவருக்குத் தெரியாமல் நாம் ஒரு செயலும் செய்ய முடியாது. இதையே பிள்ளையார்பட்டிக் கோயில் அலங்கார மண்டபத்தில் உள்ள விபூதி யோக விஸ்வரூப தரிசன விநாயகர் தெரிவிக்கின்றார். உலகில் நாம் எங்கிருந்து பார்த்தாலும் அவர் நம்மையே பார்த்துக் கொண்டிருக்கின்றார். எனவே தவறு செய்யவே கூடாது. தவறுதலாகத் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்துவிட்டால் உடனே மன்னிப்புக் கேட்க வேண்டும். மீண்டும் அத் தவற்றைச் செய்யக்கூடாது. இவ்வாறு தவறே செய்யவில்லையென்றால் வாழ்வில் ரகசியமாக எச்செய்திகளையும் ஒளித்து வைக்கத் தேவையில்லை. ரகசியமாக ஒளித்து வைக்கும் விஷயங்களே உயர் ரத்த அழுத்தத்தைத் தூண்டி, ரத்தக் குழாயையும் வெடிக்கச் செய்து துன்பத்திற்கு உள்ளாக்குகிறது. எனவே ரகசியமில்லா வாழ்வில் ஹை பிரஷ்ஷரும் இல்லை. லோ பிரஷ்ஷரும் இல்லை. ஹார்ட் அட்டேக்கும் இல்லை.

Koviloor Digital Library



துன்பங்களே இல்லை என்றால் என்ன பொருள்? இன்பமே எந்நாளும் என்பதே பொருள்.

2. காலை, மதியம், மாலை, இரவு ஆகிய நான்கு நேரங்களிலும் குறைந்தபட்சம் நான்கு டம்ளராவது பச்சைத் தண்ணீரைக் குடிக்கவேண்டும். ரேடியேட்டர் சூடாகாமலிருக்கத் தண்ணீர் ஊற்றுவதைப் போல, நாம் ஒரு நாளைக்கு நான்கு லிட்டர் தண்ணீராவது குடித்தால், வெப்ப நோய்கள் வராது.

3. நீண்ட தொலைவு பயணம் செய்யும் முன்பாக வாகனங்களில் காற்று அழுத்தம் சரியாக இருக்கிறதா எனச் சோதித்துப் பார்க்கிறோம். ஏர் செக் அப் செய்யாமல் போனால் நடுவழியில் டியூப் பஞ்சராகி விடுமே என்ற பயம் நமக்கு! அதே போன்ற ஏர் செக் அப் தான் தியானம். தியானத்தால் துன்பமே இல்லாத இன்ப மயமான வாழ்க்கை அமையும்.

ஞான யோக தியானப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு ஒரே ஒரு நாள் அரைமணி நேரம் மட்டும் மனம் திறந்து தியானம் கற்றுக் கொண்டு பாருங்கள். உங்கள் வாழ்க்கை முழுவதும் வசந்தமாகிவிடும். எந்த நோயும் வராது. ஜலதோஷம் கூட உங்கள் வீட்டை எட்டிப் பார்க்காது. செல்வ வளம் கொழிக்கும், பொருள் வரவு கூடும். சந்தோஷமும் சந்ததியும் கூடும். “இன்பமே; எந்நாளும் துன்பமில்லை!” என்ற, வாக்கினை உண்மை என உணர்வீர்கள்.

இவ்வாறான மூன்று சத்தியங்களை மேற்கொண்டால் நாமும் பல்லாண்டு காலம் நிம்மதியாக வாழலாம். என்பதையே ஜப்பான் விநாயகர்கள் கூறுகின்றனர்.

Koviloor Digital Library



நேபாள விநாயகர்

நேபாளத்திலும் திபேத்திலும் உள்ள விநாயகர் பஞ்சமுக விநாயகர் ஆவார். நான்கு திசைகளை நோக்கியதாக நான்கு முகங்களும், அவற்றின் மேலே ஒரு முகமும், ஆக ஐந்து தலை விநாயகர் எனப் புகழப்படுகிறார். ஐம்புலன்களே ஐந்து தலையாக உருவகப்படுத்தப் பட்டுள்ளன. பத்துக் கைகளை உடைய இவ்விநாயகர் தனது வலது காலின் கீழ் மூஷிக வாகனத்தைக் கொண்டுள்ளார். இடது புறம் சக்தி தேவியைக் கொண்டு சக்தி விநாயகராக விளங்குகிறார்.

சக்திகளின் வடிவம் ஏழு என்பதால் சப்த மாதாக்களுடன் சிவபெருமானும் விநாயகரும் வீற்றிருக்கும் சிற்ப வரிசை எல்லோராவில் காணப்படுகிறது. சப்த மாதாக்களுடன் காட்சி விநாயகர் வீற்றிருக்கும் கோலம் பிள்ளையார்பட்டியிலும் காணப்படுகிறது. இதன் விளைவாகவே சக்தியுடன் கூடிய விநாயகர் சிற்பம் திபேத், நேபாளத்தில் காணப்படுகிறது. விநாயகரை நம்பிப் பணிவோருக்கு சக்தி துணையாக அமைவது இயற்கைதானே?

அர்ஜுனன் தவம் செய்த இடத்தில்
தெய்வம் அற்புத உலகம் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சித்தி புத்தி விநாயகர்

விநாயகரின் இரண்டு கல்யாண குணங்கள் சித்தி புத்தி என்பன. மனைவியைப் போல எப்போதும் பிரியாதவை குணங்கள். எனவே தான் மனைவியைப் போல மடியில் தாங்கி வைத்திருக்கின்றார்.

சித்தி என்பது சித்தம் - எண்ணம் எனப் பொருள்படும். வாழ்க்கையைப் பற்றிய உண்மையை அப்படியே சொல்வதென்றால் நம்முடைய வாழ்வின் உயர்விற்கும் தாழ்விற்கும் பெரிதும் காரணமாக அமைவது நமது எண்ணங்களே! சின்னஞ்சிறு நூல் இழைகளைப் போல அன்றாடம் உருவாகும் எண்ணங்களே பிறகு ஒரே தொகுதியாகித் தேர்வடக் கயிற்றைப் போல உறுதி வாய்ந்ததாகிறது. நல்லதே எண்ணவேண்டும் என்ற முதுரை தோன்றியதும் அதனால்தான். எண்ணத்தின் வேர்கள்தான் வார்த்தைகளாகத் தழைத்து வெளிவருகின்றன. அதுவே இன்பப் பூக்களாக மலர்கின்றன.

வாழ்க்கை என்னும் கோயிலின் கோபுரவாசல் இச்சா சக்தி. கருவறை ஞானசக்தி. விமானம் கிரியாசக்தி. இம்மூன்றும் சிறப்பாக அமைய வேண்டுமானால் நாம் சித்தி புத்தி விநாயகரைத் தொழவேண்டும்.

எண்ணமே சித்தி எனப்படும். அனுபவமே ஞானம் எனப்படும். காரிய வெற்றியே புத்தி எனப்படும்.

ஒருவரது எண்ணம் சுத்தமாக - பொய்க் கலப்பின்றி இருக்கிறதா என்பது அவரது வாக்கின் மூலம் தெரிந்துவிடும். உள்ளத் தூய்மையை அளக்கும் தர்மா மீட்டர் தான் வார்த்தைகள். வாக்கு தூய்மையானால் வாழ்க்கை தூய்மையாகும்.

வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு.

என்று திருவள்ளுவர் கூறியதை மெய்ப்பிப்பதே நம் வாழ்க்கை. அவ்வாழ்க்கைத் தத்துவத்தையே சித்தி புத்தி விநாயகர் சிற்பம் நமக்கு உபதேசிக்கின்றது.

சித்தி புத்தி விநாயகரின் பெருமையை முழுக்க

Koviloor Digital Library

உணரவேண்டுமென்றால் நாம் கம்பராமாயணத்தைப் பார்க்க வேண்டும்.

இராமாயணக் காப்பியம் தொடங்கும் போது இராமர் பிறக்கவில்லை. தசரதன் கோசலையைத் திருமணம் செய்து கொண்டார். பிள்ளை பிறக்கவில்லை. பின் கைகேயியைத் திருமணம் செய்து கொண்டார். பிள்ளை பிறக்கவில்லை. அடுத்து சுமித்திரையைக் கல்யாணம் செய்து கொண்டார், அவளுக்கும் பிள்ளை பிறக்கவில்லை. அப்போது தான் ஒரு உண்மை புரிந்தது. கல்யாணம் செய்து கொண்டால் மட்டும் பிள்ளை பிறந்துவிடாது. பூர்வ ஜென்ம புண்ணியமும் இருந்தால்தான் பிள்ளைப் பேறு கிடைக்கும். பாவம் செய்தால் பிள்ளைப் பேறு கிடைக்காது. அதற்குப் பின்தான் அவருக்கு அந்தப் பாவத்தைப் புண்ணியம் செய்வதன் மூலம் கழித்து விடலாம். பல்வேறு உயிர்களுக்குத் தீங்குசெய்தமையால் மிகப்பெரிய யாகம் செய்து ஆயிரக் கணக்கானோருக்கு விருந்து கொடுத்தால் மிகப் பெரும் புண்ணியம் கூடும்; பாவம் கரையும்; அதன் பின் பிள்ளைகள் பிறக்கும் என்றனர் முனிவர்கள்.

இராமேஸ்வரம் செல்லும் வழியில் உள்ள உப்பூர் என்ற ஊரில் தான் சித்தி புத்தி விநாயகர் வெய்யில் உகந்த விநாயகர் என்ற பெயரில் அருள்புரிகின்றார். அங்கு சென்று யாகம் செய்ய வேண்டும் என்று தசரதன் புறப்பட்டார். மிகப் பெரிய அளவில் யாகம் செய்தார். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு விருந்து கொடுத்தார். அவ்விருந்தில் மிஞ்சிய பாயாசத்தை மட்டும் தான் மூன்று மனைவிகளுக்கும் கொடுத்தார். பாயாசம் கொஞ்சம் கூடுதலாக மிஞ்சியமையால் மூன்றாவது மனைவிக்கு இரண்டு முறை கொடுத்தார். அதனாலேயே அவளுக்கு மட்டும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

வேட்டையாடிய போதும் போரிட்டபோதும் பல்வேறு உயிர்களைக் கொன்று குவித்தமையினாலேயே தசரதனுக்குப் பிள்ளைப் பேறு கிடைப்பதற்குக் காலதாமதமாகியது. எல்லா உயிர்களிலும் கடவுளே ஜீவாத்மாவாக இருக்கிறார் என்ற அடிப்படை உண்மை தெரிந்திருந்தால் எந்த உயிரையும் கொன்றிருக்க மாட்டார். ராஜாவாக இருந்தாலும், தெய்வமான இராமபிரானுக்கே தந்தையென்றாலும் பாவத்தைக் கழிக்காமல் - வினைப் பயனை அனுபவிக்காமல் - இன்பத்தைப் பெற முடியவில்லை.

உள்ளம் வெள்ளையாக - தூய்மையாகப் பாவ அழுக்கின்றி இருந்தால் நல்லதே நடக்கும்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன்.
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

என்பவைதானே தமிழ்வேதம் கூறும் தத்துவங்கள்? சித்தமெல்லாம் நமக்குச் சிவமயமாய் இருக்குமென்றால், பக்கத்துணையாய் இருந்து பரம் பொருளே நம்மை வளர்ப்பார்.

Koviloor Digital Library

கோடீஸ்வரராக்கும் மகாலெட்சுமி

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.

என்று அனைவரும் பொருளாதார வளம் பெற வேண்டும் எனப் பாடுவார் கவியரசு கண்ணதாசன்.

இறைவன் என்னை ஏழையாகவே இருக்கும்படி படைத்துவிட்டார் என்று கடவுள்மீது அபாண்டப் பழி சுமர்த்தி அவர்மீது தேவையில்லாமல் வழக்குத் தொடுப்பவர்கள் பலர் உள்ளனர்.

கடவுள் யார்மீதும் அதிக விருப்பமோ, வெறுப்போ காட்டாதவர், வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர். தனக்கு உவமை இல்லாதவர். யார் யார் முயற்சி செய்கிறார்களோ அவர்கள் பணக்காரர்கள் ஆகிறார்கள். சோம்பேறிகள் கஷ்டப்படுகிறார்கள். முயற்சிதான் திருவினை ஆக்கும். அந்த முயற்சி எப்படி இருக்கவேண்டும் என்பதையே மகாலெட்சுமியின் சிற்பம் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது.

மகாலெட்சுமி படத்தை வாங்கி வீட்டில் மாட்டி வைத்தால், பணமாகக் கொட்டும் என்று யாராவது சொன்னால், நம்பிவிடாதீர்கள். தூசிதான் கொட்டுமே தவிரப் பணம் கொட்டாது. அப்படி ஒருவேளை அதிசயமாகக் கொட்டினால், படம் அச்சிடுபவர்கள் அதை ஏன் உங்களுக்குத் தருகிறார்கள். அவர்கள் வீட்டிலேயே அத்தனையையும் மாட்டி வைத்து அள்ளி விட மாட்டார்களோ அள்ளி!

மகாலெட்சுமி சிற்பம் கூறும் பாடத்தை மனத்துக்குள் வாங்கி உங்கள் சிந்தனையில் மாட்டி வையுங்கள். தினசரி அது கூறும் தத்துவப்படி வாழ்ந்து பாருங்கள். நிச்சயமாக நீங்கள் கோடீஸ்வரர் ஆகிவிடுவீர்கள்! "அதற்கு என்ன வழி முறைகளைப் பின் பற்ற வேண்டும்? சீக்கிரம் சொல்லிவிடுங்கள்! நிறையப் பணம் தேவைப்படுகிறது! ."என்று தங்கள் மனம் கெஞ்சுவது என் காதுகளுக்குக் கேட்கிறது. சொல்லிவிடுகிறேன். நன்றாகக் கேட்டு அதன்படி முயன்று பாருங்கள்.

Koviloor Digital Library

மகாலெட்சுமியின் திருமுகத்தை முதலில் பாருங்கள். என்ன அழகு! எத்தனை அழகு! கோடி மலர் கொட்டிய அழகு! இத்தனை இன்பப் பூரிப்பு எப்படி வந்தது தெரியுமா? ஒரு ஆளின் உழைப்பில்லை; மூன்று ஆட்களின் உழைப்பு வேண்டும் என்பதையே அவளது ஆறு கைகள் உணர்த்துகின்றன. மூன்று மடங்கு முயற்சி செய்யுங்கள். மூவேழு தலைமுறைக்கும் பணக்காரர்களாகவே இருப்பீர்கள்.

எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே! ஆமாம். அந்தப் பணிவுமிகுந்த அருள் பொங்கும் கண்களைப் பாருங்கள். குற்றால அருவிபோலக் குளிர்ச்சி பொருந்திய அருட்பார்வை கனிவுத் தேன் கலந்து பரிவுச் சிகரத்திலிருந்து கொட்டுகிறது.

கோடீஸ்வரி என்ற பெருமிதம் ஆணவத்தைத் தூக்கி நிறுத்தாமல், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற தாயுமானவ உள்ளத்துடன் இருப்பதைப் பாருங்கள்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவுதான் உங்களைப் பணக்காரர் ஆக்கும். ஆணவம் உங்களை ஆட்டிப் படைத்து விடும். பணிவோடும் கனிவோடும் எப்படி முயற்சி செய்ய வேண்டும் என்பதைத் திருமகள் தனது ஆறு திருக்கரங்களால் போதிக்கின்றாள். அந்தத் தத்துவ வித்தாரத் திருக்கரங்களை நேரில்வந்து உற்று நோக்குங்கள்.

வலது கரத்தால் முதலில் எடுத்து, இடது மேல் கரத்தில் வைத்துள்ளது, சங்கு. இது எங்கே கிடைக்கும்? கடலில். ஆழ் கடலில் மிக முயன்று மூச்சைப் பிடித்துக் கடினமாக முயன்று எடுத்துவர வேண்டும். நாம் ஒரு தொழிலைத் தொடங்குவதென்றால் நமது பகுதியில் இல்லாத - நமக்கு மிகவும் தேவைப்படுகின்ற - அரிய பொருளை உற்பத்தி செய்வது போன்ற அருமையான தொழிலைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் - சங்கு எடுப்பது போல.

குழந்தைகளைப் படிக்க வைப்பது என்றாலும் எந்தக் கல்வி நிலையத்தில் எந்தப் படிப்பைப் படிக்க வைத்தால் எதிர் காலத்தில் அதிகமாகப் பொருளீட்ட முடியும் என்று ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆழ் கடலிலிருந்து சங்கை எடுத்துவிட்டால் மட்டும் போதாது. பொறுமையாக அதில் துளையிட வேண்டும். வேகமாகத் துளையிட்டால் சங்கே உடைந்து போய் விடும். இதே போலத்தான் ஆர்ப்பாட்ட மில்லாமல்

Koviloor Digital Library
பொறுமையாக நன்கு சிந்தித்துத் தொழிலையும் படிப்பையும் தொடங்க வேண்டும்.

மிகச் சிறந்த தொழிலையோ, படிப்பையோ தேர்ந்தெடுத்து விட்டால் மட்டும் போதுமா? தினசரி உழைக்க வேண்டும். அதைத்தான் வலது மேற்கரத்தில் உள்ள சக்கரம் உணர்த்துகிறது.

தினசரி உழைப்பதில் சோம்பல் ஏற்பட்டுவிடக் கூடாது. அதை உணர்த்தவே வில்லும் அம்பும் அடுத்த கைகளில் காணப்படுகின்றன. உயர்ந்த நோக்கம் வேண்டும். உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல் என்பார் திருவள்ளுவர். உயர்ந்த நிலைக்கே ஆசைப்பட வேண்டும் என்பார் தொல்காப்பியர்.

நீங்கள் யாரைப்போல வரவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்? டாட்டா பிர்லா போலவா? அப்துல் கலாம் போலவா? குட்டி சாமியாரைப் போலவா? யாரைப் போல வரவேண்டும் என்று தினசரி ஆசைப்படுகிறீர்களோ அப்படியே ஒருநாள் வந்து விடுவீர்கள். இது உறுதி. சத்தியத்திலும் சத்தியமான உண்மை இது. எதை இடைவிடாது நினைக்கிறீர்களோ அதாக நீங்கள் மாறுவது- வளர்வது நிச்சயத்திலும் நிச்சயம்!

சான்றாக பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கையைச் சொல்லலாம். அப் பெருமகனார் எப்போதும் ஆஞ்சநேயரையே சிந்தித்துக் கொண்டிருந்தார். அதனால் அவருக்கு வால் முளைத்து விட்டது! அதை அறுவை சிகிச்சை செய்து அப்புறப்படுத்துவதற்காக மயக்கமருந்து கொடுக்க வேண்டும் என்றார்கள் மருத்துவர்கள். தெய்வத்தின் மேன்மையைப் பற்றிப் பேசும்போது நான் என்னையே மறந்து விடுவேன். அப்போது அறுவை சிகிச்சை செய்துவிடுங்கள் என்றார். “நான் மெய்மறந்து பேசும் போது கை காட்டுகிறேன். அப்போது சிகிச்சையைத் தொடங்குங்கள்!” என்று கூறிவிட்டு மேடையில் அமர்ந்தார்.

தெய்வம் என்ற சொல்லே ஒரு தாரகமந்திரம், இன்பச் சுரங்கம்; இனிமையின் ஊற்று; பண்பின் நாற்றங்கால்; பாசப் பூந்தோட்டம்; அருளின் விளைச்சல்; ஆன்மீகத்தின் சிகரம். எனவே அதன் அற்புதங்களை எல்லாம் நினைக்க, நினைக்க பேசப் பேசக் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகியது. நெஞ்சம் தெய்வீகச் சிறகு விரித்து இன்ப வானில் பறந்தது.

“அடடே! மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சையை ஆரம்பிக்கலாம் எனக் கையால் சைகை காட்ட மறந்து விட்டோமே!” என்ற நினைப்பு பகவான் ராமகிருஷ்ணருக்கு வந்தது. டாக்டர்களைப் பார்த்துச் சைகை காட்டினார்.

Koviloor Digital Library

"ஆப்பரேஷன் முடிந்து இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது!" என்றார் தலைமை மருத்துவர்!.

அடடா இதுவல்லவோ தெய்வீகப் பேரின்பம். தெய்வம் வழங்கும் அற்புதம் என்றால் அதற்கு நிகர் உண்டா? எனப் பலரும் வியந்தனர். அந்த வியப்பும் மகிழ்ச்சியும் நிறைவும் நம்முள் ஊற்றெடுத்துப் பெருக வேண்டுமானால் நாம் இச்சா சக்தியை வணங்க வேண்டும். இச்சாசக்தியின் உருவகம் தான் சித்தி - சித்தம். ஞான சக்தியின் வடிவம் தான் விநாயகர். கிரியா சக்தியின் தோற்றம் தான் புத்தி. அதனாலேயே சித்தி புத்தி விநாயகரை நடுநாயகமாக வைத்து வழிபட வழிபட வாழ்வில் எல்லாப் பேறுகளும் தானாகவே வந்து சேரும்.

இப்படி உயர்வாக வாழ்ந்துவரும் ஒருவரை மனத்தில் விதைபோல ஆழப்பதித்து முயற்சி என்னும் நீரையும் உழைப்பு என்னும் ஒளியையும் பாய்ச்சினால் வளர்ச்சி என்பது ஆலமரம் போலத் தழைத்து உயரும். இதனையே மகாலெட்சுமியின் கையில் உள்ள வில் உணர்த்துகிறது. அர்ஜுனன் போன்ற குறிக்கோளை அடையும் நோக்கு நமக்குக் கைவரப் பெறவேண்டும் என்பதனாலேயே அர்ஜுனன் தவம் செய்த இடத்தில் தெய்வம் அற்புத உலகத்தை உருவாக்கியுள்ளனர்.

நாலாவது திருக்கரம் அமுத கலசத்தை ஏந்தியிருக்கிறது. இன்றைய கடும் உழைப்பாளிகள் நேரத்திற்கு உணவு அருந்துவதில்லை. அது மிகப்பெரும் தவறு. உடம்பினை வளர்த்தால் தான் நாம் உயிரை வளர்க்க முடியும். சுவரை வைத்தே சித்திரம் எழுதவேண்டும். எனவே உணவு உட்கொள்ள வேண்டிய நேரத்தில் முறையாக உட்கொண்டால் தான் நாம் தொடர்ந்து முயலமுடியும்; உயரமுடியும்; நினைத்ததைச் சாதிக்கமுடியும்.

இதுவரை பார்த்த நான்கு திருக்கரங்களும் நாம் பணக்காரராக என்ன வழி என்பதைக் கூறின. நம் பரம்பரையினர் அனைவரும் தொடர்ந்து செல்வக் கோமான்களாகவே விளங்க என்ன செய்ய வேண்டும் என்பதை அடுத்து விளக்கிக் கூறுகிறது மகாலெட்சுமியின் சிற்பம்.

நாம் சாப்பிடுவது போல நான்கு மடங்கு சேமிக்க வேண்டும். அதையே அமுதக் கலசமாக மடியில் தாங்கியுள்ளாள். இந்த நான்கு பங்கு யார் யாருக்குத் தெரியுமா?

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

தென்புலம் என்பது தெற்குத் திசை - எமன் திசை. இறந்து போன நம் முதாதையர்களை நன்றி விஸ்வாசத்துடன் நினைத்துத் தினமும் ஒரு

Koviloor Digital Library

பூவையாவது வைத்து வழிபட வேண்டும். வருடம் ஒருமுறை அவர்களது சந்ததியினர் அனைவரும் ஒன்றாகக் கூடிப் படையலிட்டுப் படைக்க வேண்டும். இவ்வாறு படைப்பதால் மிகப் பெரும் செல்வம் நமக்குக் கிடைக்கும்.

கோயில் திருப்பணிகளுக்குச் செலவிட வேண்டும். வீட்டுக்கு வரும் விருந்தாளிகளின் வடிவில் தான் கடவுள் நம் வீட்டுக்கு விருந்துண்ண வருகிறார். அந்தப் பரமாத்மாவுக்குப் படைத்தால் என்ன? இந்த ஜீவாத்மாக்களுக்கு விருந்திட்டால் என்ன? எல்லாம் ஒன்று தான். வருகின்ற விருந்தாளிகள் போதும் போதும் என்று மனமும் வயிறும் நிறைய உண்டால் அந்தப் பூரணத்துவம் நம் செல்வச் செழிப்பை உயர்த்தும்.

நமது பக்கத்து வீட்டுக்காரர்கள் பசித்திருக்க நாம் முப்போதும் விருந்துண்ணக் கூடாது. அவர்கள் கிழிந்த கந்தலாடை அணிந்திருக்கும் போது நாம் அளவுக்கதிகமான பட்டாடைகளை உடுத்துக் கூடாது. நம்மைச் சார்ந்த அனைவரும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற நாம் உதவவேண்டும். அப்படி நம்மைச் சார்ந்த ஜீவாத் மாக்களையெல்லாம் நாம் பாதுகாத்தால் - ஊட்டி வளர்த்தால் - நம்முடைய பிள்ளைகள் தாமாகவே செல்வச் சிறப்போடு வளர்வார்கள். இந்தத் தருமம் தான் தலைமுறை தலைமுறையாகக் காக்கும்.

பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்த பிறகே சிறப்பு உணவுகளைச் சாப்பிட்டுப் பாருங்கள். மனநிறைவு தானாகவே தோன்றும்.

அடுத்த வலது கரம் அபய முத்திரையில் அமைந்துள்ளது. யார் என்ன கவலை என்று வந்தாலும் ஆதரித்து உதவ வேண்டும். வெறும் வாய்வார்த்தையினாலாவது ஆறுதல் சொல்லி அபயமளிக்க வேண்டும்.

இடது கீழ்க்கரம் வரத முத்திரையில் காணப்படுகிறது. அது பிறருக்குக் கொடுங்கள்; உதவுங்கள் என்ற தத்துவத்தைக் கூறுகிறது.

விலங்குகள் தமக்காக வாழ்கின்றன. அதிலிருந்து வளர்ந்த மனிதன் தனக்காகவும் பிறருக்காகவும் வாழ வேண்டும். அப்போது தான் அவன் அடுத்த பரிணாம வளர்ச்சியான தெய்வ நிலைக்கு உயரமுடியும். இதற்குத் தேவையான அடிப்படைப் பண்பு இரண்டு. 1. மன்னித்தல், 2. கொடுத்தல்

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்கள். இரைக்கின்ற கேணியில் தான் தண்ணீர் வெள்ளமாகப் பெருகும் என்பார்கள். முன்னோடிய வாய்க்காலே பின் ஓடும் என்பார்கள். முன் கை நீண்டால்தான் முழங்கை நீளும் என்பார்கள். இவற்றையெல்லாம் ஏன் சொன்னார்கள் தெரியுமா? பிறருக்கு நீங்கள் கொடுத்தால் தான் தெய்வம் உங்களுக்குக் கொடுக்கும் என்பதை உணர்த்தத்தான்.

Koviloor Digital Library

இதைத்த... ருநாதர் மிக அருமையாகச் சொன்னார்.

மன்னியுங்கள்;
மன்னிக்கப் பெறுவீர்கள்!

கொடுங்கள்;
கொடுக்கப் பெறுவீர்கள்!

எந்த அளவையால் அளப்பீர்களோ
அதே அளவையால் அளக்கப் பெறுவீர்கள்!

பிறருக்கு உதவ உதவ உங்களுக்குப் புகழ் பூத்த வாழ்க்கை மலரும். உழைத்துச் சிவந்த செங்கரத்தையே செந்தாமரை மலராக உருவகப்படுத்தியுள்ளனர்.

உழைப்பால் உயர்ந்தவர்களின் வாழ்க்கையில் புகழ் தானாகவே பூக்கும். அவர்களின் உழைப்பு மணத்தை அப்புகழ் உலகெங்கும் பரப்பும் என்பதையே செந்தாமரை உணர்த்துகிறது.

KOVILOOR ANDAVAR
A. No. 15529
LIBRARY. KOVILOOR

வெற்றி தரும் கலைமகள்

கலைகளுக்கெல்லாம் ஆணிவேரான கலைமகளின் சிற்பத்தை உற்று நோக்கினாலே கல்வியின் தேவையும் படிக்க வேண்டிய முறையும், படித்ததை வெளிப்படுத்த வேண்டிய வழிமுறையும் புலப்படும்.

கலைமகளின் திருக்கரங்களில் இடம் பெற்றுள்ள வீணையைக் கவனியுங்கள். நல்லதோர் வீணை செய்தே, அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ? எனப் பாரதியார் பாடியது வீணையைப் பற்றி அல்ல. நம்முடைய வாழ்க்கையைப் பற்றித்தான் பாடியுள்ளார்.

தமிழில் இசை என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. இன்னிசை என்பது ஒரு பொருள். புகழ் என்பது மற்றொரு பொருள். பொருளே

Koviloor Digital Library
வாழ்வின் குறிக்கோள் என வாழ்பவர்களுக்கும் வாழ்க்கை வீணையின் நரம்பாக அமைவது கல்வியே என்பதை உணரவேண்டும். நரம்புகளை முறுக்கேற்றி இழுத்துக் கட்டினால் எந்த ராகத்தை வேண்டுமானாலும் மீட்டிப் பாடமுடியும். அதே போலப் படிக்கின்ற காலத்தில் முழு முயற்சியுடன் படித்து முடித்துவிட்டால் வாழ்க்கை முழுவதும் வசந்தம் தான். அப்போது நம் வாழ்க்கை இன்னிசையாகவும் அமையும்; இனிய புகழும் கிடைக்கும்.

இந்த உயர்ந்த நிலையை அடைய நாம் என்ன செய்யவேண்டும் என்பதைத்தான் மற்ற இரண்டு கைகளும் தெரிவிக்கின்றன. வலது கையில் உள்ள அட்சமாலை "எண்ணிப் படியுங்கள்! படித்ததை எண்ணுங்கள்! எண்ணியபடி (கீழ்ப்) படியுங்கள்!" என்று கூறுகிறது.

இடது திருக்கரத்தில் உள்ள ஏட்டுச் சுவடி என்ன கூறுகிறது தெரியுமா? படித்தால் மட்டும் போதாது. எழுதவும் தெரியவேண்டும். அது தான் கற்ற கல்வியின் பயன்.

உலகில் பாடப்புத்தகத்தின் மூலமாகவும் அனுபவத்தின் மூலமாகவும் படித்ததை யெல்லாம் கட்டுரையாகவோ கதையாகவோ எழுதத் தெரியவில்லை என்றால் படித்து என்ன பயன்?

வீணை பேசுகிறது; பாடுகிறது நாம் யாராவது கேள்வி கேட்டால் மௌனம் சாதிக்கிறோம். என்ன காரணம்? பணிவா? இல்லை நமக்கு அழகாகவும், திருத்தமாகவும் பேசத் தெரியாது.

படிப்பது, எழுதுவது - பேசுவது ஆகிய மூன்றும் தான் கலைமகளின் கண்கள். இம்மூன்று திறமைகளும் ஆயுத எழுத்தாக அமைந்தால் வாழ்க்கையெல்லாம் துன்பமென்ற இருட்டே கிடையாது. கல்வியால் ஏற்படும் தெளிவு நமக்கு ஒளிமயமான வாழ்வைத் தரும் என்பதை விளக்கவே வெண்தாமரையில் சரஸ்வதியை அமரச் செய்தனர். ஒளிமயமான நிகழ்காலத்தைக் குறிப்பதே வெண்தாமரை.

தானாக வரும் லெட்சுமி, வந்த வேகத்தில் திரும்பிச் சென்றுவிடு வாள். சரஸ்வதியின் திருவருளால் வரும் லெட்சுமி சாஸ்வதமாக நம் வீட்டிலேயே தங்கிவிடுவாள்.

Koviloor Digital Library

நிம்மதி தரும் தெட்சிணாமூர்த்தி

வாழ்வின் வெற்றிக்கு வழி கூறும் தெய்வம் தெட்சிணாமூர்த்தி. அழகு ஊறித் ததும்பும் திருமுகம் அவருடையது. அமுது ஊறித் ததும்பும் விழிகள் அவருடையவை. ஞானம் பொங்கித் ததும்பும் சின்முத்திரை அவருடையவை. அருளின் மறுவடிவம் அவரது திருவடிகள்.

இமைப்பொழுதும் மறக்காமல் நினைத்துத் தொழவேண்டிய அவரை, மனதார வழிபடமுடியாமைக்கான காரணங்கள் எவை என்பதைத் தெட்சிணாமூர்த்தி விளக்கிக் கூறாமல் கூறுகிறார். அவர் அவ்வாறு வழிகாட்டப் பயன்படுத்திய முத்திரையே சின்முத்திரை என்பது. சின்முத்திரை என்றால் சிறந்த உயர்ந்த முத்திரை என்று பொருள்.

தெட்சிணா மூர்த்தியின் வலது மேற்கரத்தைப் பாருங்கள். டமருகம் இருக்கிறது. அதை எவ்வாறு ஏந்தியிருக்கிறார் பார்த்தீர்களா? கையில் நிற்காமல் வழுக்கிக் கொண்டு ஓடும் பாம்பின் மூலம் வளைத்துப் பிடித்துள்ளார். டமருகம் ஒலியின் பிறப்பைக் குறிக்கும். அதை மனம் மொழி மெய்யினைக் கட்டுப்படுத்திய பாம்பின்மூலம் விழாமல் பிடித்து வைத்துள்ளார். "ஐம்புலன்கள் என்னும் ஐந்து தலைப் பாம்பினை ஒருமுகப்படுத்தி ஒரு தலைப் பாம்பாக்குங்கள். விஷப் பாம்புபோன்ற மனத்தை நல்ல பாம்பாக மாற்றுங்கள்" என்பதையே வலது மேற்கரம் தெரிவிக்கிறது.

இடது மேற்கரம் அருட்பெரும் ஜோதியை ஏந்தியிருக்கிறது எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதை இத் திருக்காட்சி உணர்த்துகிறது.

வலது கீழ்க்கரத்தைக் கண்ணில் ஒற்றிக் கொள்வது போலப் பார்க்கவேண்டும். அதுதான் நம்மைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற்றும் கலங்கரை விளக்கம்.

அருமையான உருவகத்தின் மூலம் அருள்மயமான வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றார் தெட்சிணாமூர்த்தி.

Koviloor Digital Library

வலது கைப் பெருவிரல் தான் இறைவனின் குறியீடு. ஆட்காட்டி விரல்தான் உயிர் (ஆன்மாவின்) குறியீடு. சுண்டுவிரல் ஆணவ மலத்தைக் குறிக்கும். மோதிரவிரல் கர்ம மலத்தைக் குறிக்கும். நடுவிரல் மாயாமலத்தைக் குறிக்கும்.

ஆட்காட்டி விரல் என்னும் உயிர். எப்போதும் மற்ற மூன்று விரல்களுடன்தான் சேர்ந்திருக்குமே தவிர, பெருவிரலைச் சரணடைவது இல்லை. அதனாலேயே அடுத்தடுத்துத் துன்பங்கள் வருகின்றன.

"நானே பெரியவன்; நான் நினைத்ததையெல்லாம் சாதித்து விடுவேன்!" என அகங்காரமாக நினைப்பதே ஆணவ மலம். நம்மை விட்டு நீக்கப்படவேண்டிய குணம் என்பதாலேயே அதை மலம் என்று மெய்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சென்ற பிறப்பில் செய்த தீவினைகளும் இப்பிறப்பில் செய்கின்ற தீவினைகளும் தான் கர்ம மலம். கர்மா என்றால் வினை - செயல்.

மாயா மலம் என்பது உலகம் மிக இன்பமயமானது என்று நினைத்து, நிலையாத அதன் மாயத் தன்மையை உணராது, ஐம்புல இன்பத்திற்காக அலைவது என்று பொருள்.

ஆணவ மலம், கரும மலம், மாயா மலம் ஆகிய மூன்றையும் நீக்கி, இறைவன் திருவடியைச் சார்ந்தால், அவற்றால் வரும் துன்பங்கள் நீங்கி, இறைவனிடம் சரணாகதி அடைந்ததால் நிம்மதியான வீடுபேறு கிடைக்கும் என்பதையே சின்முத்திரை கூறாமல் கூறுகிறது.

யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்ற வள்ளுவரின் வார்த்தை தத்துவமாக நின்று ஒளிர்கிறது. எந்த எந்தத் தவறுகளிலிருந்து நாம் நீங்கிக் கொள்கிறோமோ, அந்தந்தத் தவறுகளால் வரவேண்டிய துன்பத்திலிருந்தும் நாம் விலகிக் கொள்ளலாம் என்பதை என்ன அழகாகக் கூறுகிறது இந்தக் குறள் முத்திரை!

வாழ்வின் முழுமையை உணரத் தொடர்ந்து ஞானம் தரும் நூல்களைப் படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை இடது கீழ்க்கரம் தெரிவிக்கின்றது. படி! படி!! இன்னும் படி! மேலும் படி! உயரப்படி! என்பதையே படிப்படியாக அந்த ஏட்டுச்சுவடி நமக்குப் பாடம் படிக்கிறது.

Koviloor Digital Library

விநாயகர் பிறப்பு

விநாயகரின் பிறப்புக் குறித்துப் பல்வேறு புராணக் கதைகள் உள்ளன. அவற்றுள் நம் மனம் ஏற்றுக் கொள்ளும் ஒரு கருத்தைத் தான் நாம் அழுத்தமாகச் சொல்லமுடியும்.

அற்புதங்கள் பல செய்பவர் சிவபெருமான். நெற்றிக் கண்ணிலிருந்து முருகனைப் பிறக்கச் செய்தார். கைகளிலிருந்து ஐயப்பனைப் பெற்றெடுத்தார். மந்திர ஏடுகளிலிருந்து ஓம்கார வடிவமாக விநாயகரைத் தோன்றச்செய்தார்.

பார்வதி தேவியின் கருணைப் பெருவெள்ளத்தை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். உலகில் உள்ள உயிரினங்களே தன்னுடைய குழந்தைகள் என்பதாலேயே பார்வதி தேவி, தனக்கென்று ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதற்கு என்ன ஆதாரம் என்று கேட்பீர்கள். திருவண்ணாமலையில் உள்ள சுவாமிபெயரையும் அம்மன் பெயரையும் சொல்லிப் பாருங்கள். அண்ணாமலையார் ; உண்ணா முலை அம்மன். கருணைப் பெருங்கடலாம் பார்வதி தேவி திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்திருக்கிறார்களே தவிரத் தனது மார்பிலிருந்து எந்தக் குழந்தைக்கும் பாலூட்டியதில்லை. ஏனெனில் உலக உயிர்கள் அனைத்தையும் தனது குழந்தையாக எண்ணுகின்ற ஒப்பற்ற தெய்வத் தாய் அவள்.

நீர்நிலையில் எங்கோ ஓரிடத்தில் முட்டைகளை இட்டுவிட்டுத் தனது பார்வையாலேயே குஞ்சுகளைப் பொறிக்கச் செய்யும் மீனைப்போல அப்பெருந்தெய்வம் உலக உயிர்களையெல்லாம் காத்து ரட்சிப்பதனால் தான், அவளுக்கு மீனாட்சி என்ற பெயர் உருவானது.

உலக உயிர்கள் அனைத்தையும் நலமாக வளர்க்க வேண்டும் என்ற அன்பு அவளுக்குப் பெருகுவதாலேயே காமாட்சி என்ற பெயர் உண்டானது. காமம் என்றால் அன்பு என்று பொருள்.

Koviloor Digital Library

உலகம் முழுவதும் அவளது விசாலமான அருட்பார்வை பரவுவதாலேயே அந்த அகிலாண்ட ஈஸ்வரிக்கு விசாலாட்சி என்ற புகழ்ப்பெயர் அமைந்தது.

இவ்வாறு கருணை ஊற்றான சிவபெருமானும் சக்திதேவியும் வேத மந்திரங்கள் நிறைந்த மந்திர மண்டபத்தில் நின்று, அருள்புரிந்த போது ஓம்கார மந்திரம் ஒப்புயர்வற்ற ஒரு வடிவெடுத்தது. அந்த உருவமே விநாயகப் பெருமானின் திரு உருவமாகும்.

ஓம் எனும் மந்திரத்திலிருந்து பிறந்ததாலேயே அவ்ரை மந்திர மூர்த்தி என்கிறோம். அதனாலேயே மந்திரத்தைச் சொல்லி அழைத்ததும் அருள்புரிவதற்கு விரைந்து வந்து உதவுகின்றார்.

ஓம் என்ற சொல்லுக்குள் அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்கள் உள்ளன. அ = படைத்தல், உ = காத்தல், ம் = அழித்தல். முப்பெரும் சக்தியின் வடிவமே ஓம்கார மூர்த்தி விநாயகர்.

ஞானப்பழம்

ஒரு பொருளை மேலோட்டமாக அறிந்து கொள்வது அறிவு [Knowledge] எனப்படும். அதன் அடிப்படை உண்மை உட்பட ஆழமான பொருளை உணர்ந்து கொள்வது ஞானம் [Wisdom] எனப்படும்.

எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்பார் திருவள்ளுவர். எந்த ஒரு பொருளைப் பார்த்தாலும் அதன் நுண்பொருளைக் காண்பது தான் அறிவின் தெளிவு; அதுதான் ஞானம் எனப்படுவது. ரகசியங்களின் ரகசியம் தான் ஞானம்.

ஞானப் பழமாக விளங்குபவர் விநாயகப் பெருமான். அதை இறைவனின் திருவிளையாடல்களுள் ஒன்றாகக் காண்கிறோம்.

Koviloor Digital Library

உலகத்தை யார் விரைவாகச் சுற்றிவந்து முதலில் வந்து சேர்கிறார்களோ அவர்களுக்கே ஞானப்பழம் பரிசாக வழங்கப்படும் என்றார் சிவபெருமான்.

அறிவுக் கடவுளான முருகன் தனது மயில் வாகனத்தில் அமர்ந்து விரைவாக உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டார்.

விநாயகர் மெய்ப்பொருள் காண்பவர் அல்லவா? எனவே ஆழமாக யோசித்தார். பெற்றோர்கள் தான் நம்மை உருவாக்குகிறார்கள். அவர்கள் இல்லையென்றால் நாம் உலகத்தைப் பார்த்திருக்க முடியாது. எனவே அவர்கள் தான் நமது உலகம் என்ற முடிவினை ஆணிவேராகக் கண்டார். விநாயகர் உலகத்தைச் சுற்றுவதாக எண்ணிப் பெற்றோரைச் சுற்றி வந்தார். அந்த ஞானத்தால் பெற்ற பழம் என்பதாலேயே அதற்கு ஞானப்பழம் என்ற பெயர் வந்தது.

ஞானப்பழத்தை விநாயகர் தன் அறிவு நுட்பத்தால் பெற்றார் என்பது முதல் கருத்து. அவரை மனக்கோயிலில் வைத்து வழிபடுபவர்கள் இப்படிப்பட்ட ஞானமயமான முடிவுகளையே எடுக்க வேண்டும் என்பதே இதனால் உணரப்படும் கருத்தாகும்.

கடவுளை நேரில் காணலாம்

"கடவுளை யாரும் நேரில் பார்த்ததில்லை. பார்க்கவும் முடியாது. அவர் தத்துவப் பொருள். அவரை நேரில் காண்பதென்பது முடியாது!" என்று பலரும் கூறுகிறார்கள்.

"கடவுள் இயற்கை மயமானவர். பஞ்ச பூதமாக இருக்கிறார். சூரிய மண்டலம், சந்திர மண்டலமாக இருக்கிறார். இந்த ஏழுடன் சேர்த்து எட்டாவதாக நமது ஆன்மாவாக இருக்கிறார். எனவே கடவுளை உணர முடியுமே தவிர, நேரில் ஒரு தனி உருவமாகப் பார்க்க முடியாது. காற்றை உணரலாம். இது தான் காற்று என்று கையில் பிடித்துச் சொல்லமுடியுமா? மின்சக்தி இப்படித்தான் இருக்கும் என்று வருணிக்க முடியும். அதனைத்

Koviloor Digital Library
தொட்டுக் காட்ட முடியுமா? ” என வாதங்களை அடுக்கிக் கொண்டே போவார்கள் சிலர்.

மின்சாரத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டாம். அது விளக்கின் வழியாக வரும்போது ஒளியைத் தருகிறது. விசிறி மூலம் வரும்போது காற்றைத் தருகிறது. அடுப்பின் மூலம் வெளிப்படும் போது நெருப்பைத் தருகிறது. தொலைபேசி மூலம் செயல்படும் போது ஒலியைத் தருகிறது. ரயிலின் மூலம் வெளிப்படும் போது இயக்கத்தைத் தருகிறது.

மின்சக்தி ஒன்று தான்; அதன் பயன்பாடுகள் அதிகம். இறை சக்தி ஒன்று தான். அது நம் ஆன்மாக்களின் மூலம் வெளிப்படுத்தும் ஆற்றல்கள் பல.

நமது ஆன்மா (உயிர்) தான் கடவுள். நம்மைக் கடந்தும் நமக்கு உள்ளும் இருப்பவரைத் தானே கடவுள் என்ற காரணப்பெயர் சுட்டுகிறது?. பிறவிப் பெருங்கடலைக் கடக்க நம்முள் இருந்து உதவுபவர் என்று தான் வேதங்களும் புகழ்ந்து பாடுகின்றன!

இதனால் பெறப்படும் பெரிய உண்மை என்ன? நமது ஆன்மாதான் கடவுள். கடவுளின் ஒரு சிறு பகுதி! அவர் பரமாத்மா; நாம் ஜீவாத்மா!

நமது பெற்றோரைப் போலவே நமக்கு மூக்கும் விழியும் அமைந்துள்ளன.அவர்களது குணங்களே நம்மிடமும் வெளிப்படுகின்றன. அவர்களைப் போலவே நமக்கும் சுள்ளென்று கோபம் வருகிறது. நாமும் சுள்ளான் ஆகிறோம்! அல்லது அவர்களைப் போலவே சாந்த சொரூபமாக விளங்குகிறோம். இதெல்லாம் எதனால் நேர்ந்த விந்தை? ரத்தத்தில் அவர்களது குணாதிசியங்களும் பதிவாகி வருகின்றன என்பதே உண்மை.

நம் உடலைத் தந்தவர்கள் பெற்றோர். அதனால் அவர்களைப் போலவே உ.டலமைப்பும் குணங்களும் நமக்கு அமைந்துள்ளன.

நம் உயிரை (ஆன்மாவைத்) தந்தவர் யார்? கடவுள். அவரது திருக்குணங்கள் நம்மிடம் பதிவாகவில்லையா? அவரது திருக்குணம் என்ன? அருள். அருள் என்றால் என்ன? அன்பு பெற்றெடுக்கும் குழந்தைதான் அருள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என வள்ளலார் புலம்புகிறாரே அதுதான் அருள். அன்பின் தொகுதி அருளாகிறது. நம் குடும்பத்தாரிடம் நாம் பொழிவது அன்பு. அதன் வளர்ச்சியாக உலக உயிர்களையெல்லாம் நமது உற்றார் உறவினராக நேசித்துக் காப்பதே அருள். அதனால் தான் காக்கை குருவி எங்கள் சாதி என்றார் பாரதியார்.

Koviloor Digital Library

அவ்வாறு உலக உயிர்களையெல்லாம் நமது உயிராக எண்ணிப் பாதுகாக்கும் உணர்வே அருள் வெளிப்பாடு ஆகும். இதுவே தெய்வத்தின் திருக்குணமாகும்.

இந்தத் தெய்வீக உணர்வை நம்முள் ஊறச் செய்வதே தியானம். நான் கடவுளின் வடிவாக இருக்கிறேன் என உணர்வதும் நான் தெய்வத்தின் அருளை வெளிப்படுத்துவேன் எனச் செயல்புரிவதுமே நம்மை வீடு பேறுக்குத் தகுதி செய்து கொள்வதாகும்.

தெய்வம் என்னும் பரமாத்மாதான் நம் ஆன்மா என்னும் ஜீவாத்மாவாக வந்துள்ளது என்ற மெய்ஞானத்தை உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்த நிமிடத்திலேயே நாம் தெய்வ சொரூபம் பெற்றுவிடுவோம். நம்மில் - நம் ஆன்மாவில் தெய்வத்தைக் காண்பதும் - அருள் வடிவாக அதை வெளிக்காட்டுவதுமே நமது தலையாய கடமை. இதுவே கடவுளை நேரில் காண்பதாகும்.

நமக்கு முன்பின் தெரியாத ஒருவர் வாழைப்பழத் தோலில் காலை வைத்து வழுக்கி விழப்போகிறார் என்பதைப் பார்த்ததும், அவரைப் பிடித்து நிறுத்தி, வாழைப்பழத்தோலை அப்புறப்படுத்துகிறோமே, அதுதான் அருள்.

“சாமி! இதை நான் கவனிக்கவே இல்லை. நல்ல வேளை காப்பத்துனீங்க சாமி! ரொம்ப நன்றி சாமி!” என்று அந்த மூன்றாம் மனிதர் நன்றி கூறுகிறார். இது சாதாரணமாக வாழ்க்கையில் பார்க்கும் காட்சி தான். ஆனால் இதில் மறைந்துள்ள ஒரு உண்மையைப் பார்த்தீர்களா?

உங்களுக்குள் மறைந்துள்ள சாமியை அவன் கண்டுபிடித்து விட்டான்! ஆனால் உங்களுக்குள் இருக்கும் சக்தியை நீங்கள் இன்னும் உணரவே இல்லையே! இப்படி நமக்குள் மறைந்திருந்து நமக்கு உதவிக்கொண்டே இருக்கும் அற்புதத்தின் பெயர் தான் தெய்வம்! தெய் என்றால் மறைந்திருந்து என்று பொருள். நமக்குள் மறைந்திருக்கும் தெய்வீக ஆற்றலை உணர்ந்து நமது தெய்வீக சக்தியை வெளிப்படுத்த நாம் பிறருக்கு முடிந்த அளவு உதவவேண்டும்.

இந்த மெய்ஞானத்தை விளக்கவே விநாயகப் பெருமான் காக்கையின் வடிவில் வந்து அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி ஆற்றைப் பெருகச் செய்தார்.

ஒரு உழைப்பாளியாக (மெய்க்காட்டாளாக) வந்து நந்தனாருக்காக ஒரே இரவில் ஒரு திருக்குளத்தை வெட்டி முடித்துக் கொடுத்தார்- திருப்புன் கூரிலே. அதனால் தான் அவரைக் குளம்

Koviloor Digital Library

வெட்டி விநாயகர் என்று இன்றும் போற்றி வழிபடுகின்றனர்.

விநாயகர் யானைத் தலையுடனேயே வந்து உதவுவார் என எதிர்பார்க்கக் கூடாது. எந்த உயிரின் மூலமாகவும் வந்து அவர் உதவி புரிவார். அவ்வாறே காக்கை வடிவிலும், மெய்க்காட்டாள் வடிவிலும் வந்து உதவினார். மெய் (உண்மை நிலையைக்) காட்டும் ஆள் அவர்தானே?

அவர் ஓம்கார வடிவமான யானைத் தலையுடன் வந்து பட்டினத்தாருக்கு உதவினார்.

பட்டினத்தார் தனது செல்வங்களை யெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந் தளிக்குமாறு தனது கணக்கப் பிள்ளை சேந்தனாரிடம் கூறிவிட்டுத் துறவியாகிச் சென்றார்.

சேந்தனாரும் அவ்வாறே தகுதியறிந்து ஏழைகளுக்கு உதவியபோது, சோழ மன்னன் அவரைச் சிறையிலடைத்தான். உதவச் சென்ற மகனுக்கு நேர்ந்த நிலையறிந்து சேந்தனாரின் தந்தை பட்டினத்தடிகளிடம் சென்று காப்பாற்றுமாறு முறையிட்டார். பட்டினத்தடிகள் சிவபெருமானை நோக்கிப் பாடினார். சிவபெருமான் "உடனடி உதவிக்கு விநாயகரைப் பாடிப் பணிந்து பயன் பெறுக!" என அருளாசி கூறினார். அதன்படி பட்டினத்தார் கசிந்துருகிப் பாடியதும் விநாயகர் தனது ஓம்காரக் கோலத்துடன் நேரில் தோன்றினார். சேந்தனாரை அடைத்துள்ள சிறைச்சாலை வரை தன் துதிக்கையை நீட்டினார். சிறைக் கதவுகளை நொறுக்கினார். சேந்தனாரை அப்படியே தூக்கிக் கொண்டு வந்து அவரது வீட்டில் அமர்த்தினார்.

அடேயப்பா! தெய்வத்தை நம்பினால் அவர் எவ்வளவு பெருங்கருணை வடிவமாக உதவியுள்ளார் பாருங்கள்! கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கு இதற்கு மேலும் சான்றுகள் தேவையா? நம்பிக்கையை வளர்க்கும் தும்பிக்கை நாதனே நமக்குப் பெரும் துணை.

இந்த அற்புதமான சிற்பத்தைக் கண்குளிர, மனம்குளிர, ஆன்மா குளிரப் பார்ப்பவர்களுக்கு எப்போதும் காதில் கேட்கும் சிவபெருமானின் திருவாசகம்; "உடனடி உதவிக்கு விநாயகரைப் பாடிப் பணிந்து பயன்பெறுக!" என்பதே!

Koviloor Digital Library

குபேர விநாயகர்

குபேரன் பெரும் கோடீஸ்வரன் ஆனது எதனால் தெரியுமா? பிள்ளையார்பட்டியில் உள்ள பசுபதீசுவரரை வழிபட்டதனால்தான்!

கொஞ்சம் பணமிருந்தால், அது நம்மைக் காப்பாற்றும். அதிகப் பணமிருந்தால், நாம் தான் அதைக் காப்பாற்ற வேண்டும்.

நம் தேவைக்கு அதிகமான பணத்தை ஏழை எளியவர்களுக்கு உதவிக் காக்கவேண்டும். இதனால்தான் செல்வத்துப் பயனே ஈதல் என்றும் செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் என்றும் கூறினார்கள்.

அதிகச் செல்வம் பெற்றிருந்தும் பிறருக்குப் பகிர்ந்து அளிக்கவில்லை என்றால் தொழு நோய் வரும். பிறருடைய உள்ளத்தில் இருக்கும் ஜீவாத்மாவை (இறைத் தன்மையைத்) தொழாத காரணத்தால் வரும் நோயே தொழு நோய்.

பிறருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை மூட்டை கட்டி வைத்ததனால் பாவமூட்டையைச் சேர்த்தான் குபேரன். இதனால் அவனுக்குத் தொழுநோய் வந்தது. அழுதான்; தொழுதான் விநாயகரை.

விநாயகர் அவன்முன் தோன்றினார். அவன் வைத்திருந்த ஏராளமான பொன்னும் பொருளும் நோய் தீர்க்க உதவாது என்று கூறி அருகம் புல்லை மருந்தாகக் கொடுத்தார். அவன் உடலும் உள்ளமும் சுத்தமானது. அதனால் ஏழைகளுக்குப் பொருளை வாரி வழங்கினான்.

பிறருடைய உள்ளத்தில் இருக்கும் ஜீவாத்மாவிற்கு உதவுவதே பரமாத்மாவுக்கான பெரிய வழிபாடாகும். ஏழையின் சிரிப்பில் தான் இறைவன் மலர்கின்றார்!

Koviloor Digital Library

மரியாதை விநாயகர்

சின்னச்சின்ன இதழ்கள் சேர்ந்தே பெரியதொரு மலராகின்றன. சின்னச் சின்ன சந்தோஷங்கள் இணைந்தே நம் வாழ்க்கையைப் பேரின்பப் பூங்காவாக மாற்றுகின்றன.

நம்மைப் பிறர் மதிக்கவேண்டும்; பாராட்ட வேண்டும்; புகழ வேண்டும் என நினைக்கிறோம். நாம் அவ்வாறு பிறரை மதிக்கிறோமா? பாராட்டுகிறோமா? புகழ்கிறோமா? என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

மரியாதை என்பது கொடுத்துப் பெறுவது. பிறரை நாம் மதிக்கின்றோம் என்பது தெரிந்தால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நம் மகிழ்ச்சிக்கு இடையூறு வரும்போதெல்லாம் காப்பாற்றுவார்கள். இதனாலேயே ஒரு இடத்திற்குச் செல்லும்போது மரியாதைக் குரியவர்களிடம் விடை பெற்றுச் செல்வது நம் வழக்கமாக இருக்கிறது.

சிவபெருமான் எங்கு சென்றாலும் விநாயகரிடம் சொல்லி விட்டுத்தான் செல்வார். ஒரு முறை திரிபுர சம்ஹாரப் போருக்குச் செல்லும் போது மட்டும் சொல்லிக் கொள்ளாமல் சென்று விட்டார். அதனால் நடந்தது என்ன தெரியுமா?

விநாயகருக்கு ஏற்பட்டது மஹா கோபம். மியூசியத்திற்கு நேரில் வந்து அவர் முகத்தைப் பாருங்களேன். கோபக்கனல் கண்களில் கொப்பளிக்கிறது. சீற்றத்தால் தும்பிக்கை துடி துடிக்கிறது.

இதன் விளைவு என்ன தெரியுமா? சிவபெருமான் சென்ற தேரின் அச்சாணி முறிந்து விட்டது! ஒரு சக்கரம் உடைந்து மண்ணில் புதைந்து விட்டது. மற்றொன்று வானில் பறந்துவிட்டது. தேர் நொறுங்கி விட்டது. குதிரைகள் பயத்தால் மிரண்டு ஓடிவிட்டன. என்ன செய்வது என்று திகைத்தார் சிவபெருமான். ஞானக்கடவுள் என்பதால் ஏன் நடந்தது இவ்வாறு? என்று சிந்தித்தார்.

Koviloor Digital Library

விக்கினங்களை - தடைகளைத் தீர்ப்பதற்கென்றே தனியாக ஒரு கடவுளைப் படைத்துவிட்டு அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டோமே என்று மனம் வருந்தினார். "திரிபுர சம்ஹாரப் போருக்குச் செல்லவேண்டும். தடைகளைத் தீர்த்து அருள் புரியப்பா!" என்று வேண்டினார்.

ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவை வழிபடுவதில் எந்த ஏற்றத்தாழ்வும் நேர்வதில்லை. இங்கு, தந்தை மகனை வணங்கியதாக நாம் பார்க்கக் கூடாது. ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவை மதித்துப் போற்றுகிறது; அதனால் உயர்கிறது என்பதே பொருள்.

இதனை மேலும் விளக்கவே வைரவன்பட்டிக் கோயிலில் காணப்படும் அரிய சிற்பங்களின் படத்தை மேலே வைத்துள்ளோம். இதில் இராம பிரான் அனுமனைப் பார்த்து வணங்குகிறார்!.

லெட்சுமணனின் மீது நாகாஸ்திரம் பாய்ந்ததால் அவன் மயங்கிச் சாய்ந்தான். குறிப்பிட்ட நேரத்திற்குள் சஞ்சீவி பர்வத மலையைத் தூக்கி வந்து காத்தவன் அனுமன். இதனால் லெட்சுமணன் உயிர் பிழைத்தான். இதற்கு நன்றி செலுத்தவே இராமபிரான் அனுமனைப் பார்த்துக் கைகூப்பி வணங்கினார்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சிந்தனையுடன் பார்த்தால், உலகில் உள்ள எந்த ஆன்மாவும் மற்றொரு ஆன்மாவைவிட உயர்ந்ததுமில்லை; தாழ்ந்ததுமில்லை. ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலமே உயர்வடையலாம் என்பதை அறிகிறோம்.

சிவபெருமான் விநாயகரை நோக்கி வணங்கியதும் தேர்ச் சக்கரங்கள் இணைந்தன; தேர் நேரானது; குதிரைகள் தேரைப் பறக்கச் செய்தன. திரிபுர சம்ஹாரப் போர் சிவபெருமானுக்கு வெற்றியைத் தந்தது. இதன்மூலம் அறியப்படும் நீதி என்ன? தினசரி வேலைகளைத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கினால் தொல்லைகள் ஏதும் வாராது என்பதே உண்மை.

Koviloor Digital Library

காக்கும் தெய்வம்

பிரஹலாதனின் தந்தை இரணியன். அவன் கடுந்தவம் புரிந்து ஒரு விநோதமான வரத்தைக் கேட்டான். அது: சாகாமலிருக்கும் வரம்!

கடவுள், "இயற்கைக்கு முரணான வரத்தைக் கேட்காதே! தரமுடியாது! அம்மா என்ற சொல்லைச் சொல்லும் போது 'அ' என்ற ஒலி கேட்டுச் சற்று நேரத்தில் அது மறையவேண்டும். அடுத்து 'ம்' கேட்கவேண்டும்; மறையவேண்டும். அதற்கடுத்து 'மா' கேட்க வேண்டும்; மறையவேண்டும்ம். அப்போது தான் "அம்மா!" என்ற சொல் புரியும். 'அ' என்ற ஒலி மட்டும் மறையாமல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தால், ஏதாவது புரியுமா? அது போலத் தான்; புதியன தோன்றவேண்டும்; பழையன மறைய வேண்டும். அது தான் உலக நியதி! வேறு ஏதேனும் மாற்று வரம் வாங்கிக்கொள்!" என்றார்.

தெய்வத்தைக் காட்டிலும் மிகுந்த அறிவாளி தானே என்ற தலைக்கனம்-ஆணவம் இரணியனுக்கு இருந்தது. எனவே இறைவனையே ஏமாற்றுவது போல ஒரு வரத்தைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வழங்குமாறு வேண்டினான். அவை இவை தான்:

1. எனக்கு மனிதனாலும் சாவு நேரக்கூடாது;
விலங்குகளாலும் சாவு நேரக்கூடாது

2. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட
எந்த ஆயுதத்தாலும் கொல்லப்படக் கூடாது.

3. எனக்கு மண்ணுலகத்திலும் சாவு வரக்கூடாது;
விண்ணுலகத்திலும் சாவு வரக்கூடாது

4. நான் பகலிலும் சாகக் கூடாது;
இரவிலும் சாகக் கூடாது

Koviloor Digital Library

5. நான் வீட்டிற்குள் இருக்கும் போதும் இறக்கக் கூடாது; வீட்டுக்கு வெளியிலும் இறக்கக் கூடாது

6. இவையாவற்றையும் மீறி என்னை யாராவது நூதனமாகக் கொல்ல நேர்ந்தால், அப்போது சிந்தும் ஒவ்வொரு துளி ரத்தத்திலுமிருந்து நான் நூறு மடங்காகப் பெருகி நூறு பேராகத் தோன்றவேண்டும்! என்று ஆறு கிளை வரங்களாகக் கேட்டான்.

ஒருவரின் ரத்தத்திலிருந்து குளோனிங் முறையில் பலரைத் தோற்றுவிக்கலாம் என்று விஞ்ஞானிகள் இப்போதுதான் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் இதை எப்போதோ வரமாகக் கேட்டுவிட்டான் இரணியன்! மெய்ஞானம் மிகப் பழமையானது. அதை விஞ்ஞானம் இப்போது தான் புதிதாகக் கண்டுபிடித்துள்ளது.

சிவபெருமானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அடடே! எத்தனை வகையான வரங்கள்! எவ்வளவு பாதுகாப்பான வரங்கள்! ஏதோ உலக சாதனைகள் செய்து உயிரினங்களை எல்லாம் காக்கப் போகிறான் போலிருக்கிறது! என்று எண்ணித் "தந்தேன் வரம்!" என்றார்.

வரம் பெற்றதும் அவனது ஆணவம் விஸ்வரூபம் எடுத்தது. அநியாயம், கொடுமை, அக்கிரமம், அராஜகம் என்ற சொற்களுக்கெல்லாம் விளக்கம் கூறும் "அகராதி"யாக அவன் விளங்கினான்! என்ன செய்வது எனத் தெரியமால் பூலோகமும் தேவலோகமும் தடுமாறின.

இரணியனை எவ்வாறு கொல்வது என்று கலந்து ஆலோசிப்பதற்காகத் தேவர்கள், மூவர்கள், தெய்வங்கள் அனைவரையும் மந்திராலோசனைக்காகத் திருமால் வரவழைத்தார்.

இவ்வாறு தெய்வங்கள் அனைவரும் கோஷ்டி சேர்ந்து ஆலோசனை செய்த ஊர்தான் திருக்கோஷ்டியூர்!

இந்த இடத்தில் ஒரு வாழ்க்கைத் தத்துவ விளக்கத்தைப் பார்க்க வேண்டும்.

வாழ்க்கையில் பெரிய பிரச்சனைகள் வருவது இயற்கை. அதை எப்படி முறியடிப்பது என்று நம் பெற்றோரையோ, நண்பர்களையோ, மனைவி மக்களையோ கலந்து ஆலோசனை செய்ய வேண்டும்.

தீர்க்க முடியாத பிரச்சனை என்று எதுவுமே இல்லை. இதை அறிவுத்திருக் கோயில் கட்டிய ஆன்மீக குரு வேதாத்திரி மஹரிஷி மிக அருமையாக விளக்குவார்.

Koviloor Digital Library

எல்லாப் பூட்டுகளுக்கும் சாவிகள் இருக்கின்றன. அதே போல எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகள் இருக்கின்றன. எந்தப் பிரச்சனைக்கு எது தீர்வு என்று ஆராய்ந்து பொறுமையாகத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். எந்தப் பூட்டுக்கு எந்தச் சாவி என்பதைப் போலப் பொறுமையாகத் தேடவேண்டும்.

இதையே நாகூர் அனீபா அவர்கள் தன் காந்தக் குரலில் இனிமையாகப் பாடுவார்!

இறைவனிடம் கை ஏந்துங்கள் - அவன்
இல்லை என்று சொல்லுவதில்லை!
பொறுமையுடன் கேட்டுப்பாருங்கள் - அவன்
பொக்கிஷத்தை மூடுவதில்லை!

பொறுமையோடு யோசித்த மந்திராலோசனைக் கூட்டத்தில் ஒவ்வொருவரும் ஒரு வழியைக் கூறினர். எதற்கும் நேர் வழியையும் குறுக்கு வழியையும் தேர்ந்தெடுக்கும் ஞான மூர்த்தியான விநாயகர் தனது ஆலோசனைகளைக் கூறினார்.

வழக்கறிஞரைப் போல விநாயகர் இரணியனின் வரங்களை அலசிப் பேசினார்.

1. இரணியன் மனிதனாலும் சாகமாட்டான், விலங்கினாலும் சாகமாட்டான். அதனால் மனித உடம்பும் சிங்கத் தலையும் கொண்ட புது அவதாரம் எடுத்துக் கொல்லலாம்!

2. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதத்தால் சாவு நேரக் கூடாது என்று தானே வரம் கேட்டுள்ளான்! கைவிரல் நகத்தால் அவன் மார்பைக் கீறிப் பிளந்து விடுங்கள்!

3. இரணியன் மண்ணிலும் சாகமாட்டான்; விண்ணிலும் சாகமாட்டான். அதனால் மடியில் படுக்க வைத்துக் கொன்று விடலாம்!

4. பகலிலும் சாகமாட்டான்; இரவிலும் சாகமாட்டான். அதனால் சாயந்திரம் கொன்று விடலாம்!

5. வீட்டுக்குள்ளும் சாகமாட்டான்! வெளியிலும் சாகமாட்டான். எனவே படிக்கட்டில் வைத்துக் கொன்று விடலாம்!

6. ரத்தம் கீழே வடிந்தால் தானே நூறு மடங்காகப் பெருகிவருவான்? ஒரு சொட்டு ரத்தம் கூடக் கீழே சிந்தாமல் சிங்க முகத்தால் குடித்துவிடலாமே! என்றார். அப்படியே நடந்தது. அனைவரும் பாராட்டினர்!

Koviloor Digital Library

எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையையும் மீறி உடைத்துத் தகர்த்து நொறுக்கி நம்மைத் தெய்வம் காப்பாற்றும் என்ற திண்ணிய மன உறுதி வேண்டும். எங்கெங்கும் அவர் புகுந்து சென்று பார்த்துக் காப்பாற்றும் தனித் திறமை படைத்தவர் என்பதையே அவரது மூஷிக வாகனம் தெரிவிக்கிறது. மூஞ்சூறு எந்த இடத்திற்கும் துளைத்துச் சென்று வரும் கூரிய மூக்குடையது அல்லவா?

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் புராணச் செய்தி இது!

பஞ்சபாண்டவர் தபசுமலை

“மகாபாரதப் போரில் வெற்றி பெறுவதற்குப் பாசுபதாஸ்திரம் தேவை. அதை வழங்குபவர் மருதீஸ்வரர். அவர் கோயில் கொண்ட இடம் எருக்காட்டூர் என்னும் பிள்ளையார்பட்டி. எனவே அங்கு சென்று தவம் செய்து பாசுபதாஸ்திரத்தைப் பெற்று வாருங்கள்! நிச்சயம் வெற்றி கிடைக்கும்!” என்றார் பகவான் கிருஷ்ணர்.

தவம் செய்ய வடநாட்டில் இல்லாத இடமா? இங்கு ஏன் வந்தார்கள் என்ற கேள்வி நம் மனத்துக்குள் முளைக்கும்.

பசு பால்தரும் என்றாலும் கொம்பில் பால் வராது. மடியில் மட்டுமே பால் சுரக்கும். அதே போல இந்தியா முழுவதும் தெய்வீகம் இருக்கிறது

Koviloor Digital Library

என்றாலும் தெய்வம் அருள் மழையைப் பொழியும் அற்புதமான இடம் பிள்ளையார்பட்டிதான். அதனால் தான், நூற்றுக் கணக்கான முனிவர்கள் இங்கு வந்து தவம் செய்துள்ளனர். அத்தனை முனிவர்களும் முதலில் வழிபட்ட தெய்வம் தர்ம முனீஸ்வரர். இன்றும் தவ வேள்வியை வளர்ப்பவராகத் தர்ம முனீஸ்வரர் விளங்குகிறார்.

பஞ்ச பாண்டவர்கள் விநாயகரையும், மருத மரத்தையும் மருதீஸ்வரரையும் வழிபட்டுத் தவம் செய்துள்ளனர். அவர்கள் தவம் செய்த குன்றாம் மலை இன்று குன்னாமலை என்று வழங்கப்படுகிறது.

நிலத்திலிருந்து அறுபதடி உயரம் உயர்ந்தோங்கிய மலையில் இருபதடி உயரத்தில் குகை ஒன்றினை அமைத்து, ஐந்துபேர் தங்கித் தவம் இருப்பதற்கு ஏற்றாற்போல ஒரு தவச்சாலையினை ஏற்படுத்தியுள்ளனர். அதில் இன்றும் ஐந்து பேர் அமர்ந்து தவம் செய்யலாம். வெயிலோ, மழையோ எந்தப் பாதிப்பும் இல்லாமல் மன நிறைவாகத் தியானம் செய்வதற்கான உத்தமமான இடம் இது. இதில் அமர்ந்து ஓம் என நாம் ஒரு முறை கூறினால், அக் குகையிலிருந்து ஓம் என்ற ரீங்காரம் அடுத்து ஒலிக்கின்றது. அங்கு ஏற்படும் தெய்வீக இன்ப அதிர்வுகள் நேரில் அனுபவிப்பதற்கு உரியவை.



Koviloor Digital Library

தெய்வம் அற்புத உலகத்திலிருந்து பத்து நிமிடங்கள் நடந்தால் போதும், பஞ்சபாண்டவர் மலை வந்து விடும். அதன் உச்சியில் மிதந்து வரும் தெய்வீகத் தென்றல் காற்று நம்மை உடல் முழுதும் தழுவி ஆனந்தப் பரவசத்தை ஏற்படுத்துகிறது.

பிரதோஷ நாளில் நாம் பிள்ளையார்பட்டி கோயிலில் நின்றால், அங்கு வரும் முன்னூறுக்கும் மேற்பட்ட வேத பாடசாலை மாணவர்கள் ருத்ர ஜபம் முழங்கும்போது ஒரு சந்தேகம் ஏற்படும். நாம் இருப்பது பிள்ளையார்பட்டியிலா? கைலாசத்திலா? என்று.

பஞ்சபாண்டவர் மலை உச்சியில் நிற்கும் போது ஒரு சந்தேகம் தோன்றும். நாம் நிற்பது பஞ்சபாண்டவர் மலையிலா? இல்லை ஊட்டி, கொடைக்கானலிலா? என்று. அவ்வளவு தூய்மையான குளிர்ந்த சுகமான மந்திரக் காற்று! பரமானந்தம் என்ற சொல்லுக்கு முழுவிளக்கம் தெரியாமலிருக்கலாம் ஆனால் அதை முழுக்க முழுக்க உணர வேண்டுமானால் பஞ்ச பாண்டவர் தபசு மலைக்கு அவசியம் வரவேண்டும்!

இந்த ஓம்கார ரீங்காரம் தெய்வம் அற்புத உலகத்தில் உள்ள தியான மண்டபத்திலும் கேட்கிறது. அதே தெய்வ உணர்வலைகள்-தெய்வீக நுண் அதிர்வுகள்- புல்லரிப்பு ஆகியவற்றை உணரமுடிகிறது!

தனக்கு உவமை இல்லாதவர்

தெய்வத்தின் ஆற்றலை அளந்து அறிந்து சொல்லமுடியாது. ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக ஆண்டவன் இருக்கிறார். அவரை முழுமையாகக் கண்டவர்கள் சொன்னதில்லை; சொன்னவர்கள் கண்டதில்லை.

Koviloor Digital Library

அதனாலேயே "தனக்கு உவமை இல்லாதவர்" என்று வள்ளுவரும் ஒரு பெரிய முற்றுப் புள்ளி வைத்துவிட்டார். அடி முடி காணமுடியாத நாதர் அவர் என்றே அண்ணாமலைத் தீபம் சூடாகச் சொல்கிறது.

உலகமெல்லாம் காக்கின்ற தெய்வத்தை அழிக்கவேண்டும்; அதன் இடத்தைத் தாங்களே பிடித்துக்கொண்டு முதல்வனாகத் திகழ வேண்டும் என ஆசைப்பட்ட அரக்கர்கள் சிலர் இருந்தனர்.

அவர்கள் 1. கஜமுகாசுரன் 2. பத்துத்தலைச் சிந்தூரன் 3. கழுகுவடிவில் வந்த கிருத்திகாசுரன். மூவரையும் விநாயகர் வென்றார். இறைவனை வெல்லும் ஆற்றல் எங்கும் எவரிடமும் இல்லை என்பதே தலையாய உண்மை.

பாதாள விநாயகர்

தெய்வம் அற்புத உலகத்தில் பெரிதும் பாராட்டிப் போற்றப்படுபவர் பாதாள விநாயகர்.

திருப்பதிக்கு அருகில் உள்ள திருக் காளாஸ்திக் கோயிலில் பாதாள விநாயகர் உள்ளார். நாசிக் பஞ்சவடியில் பாதாளவிநாயகர் உள்ளார். அவற்றை போல அமைக்கப் பட்டுள்ள பாதாள விநாயகரை நாம் வழிபட்டால் நமது ஆதிகால நினைவுகளும் ஆண்டவனின் கருணையும் கண்டிப்பாக நம் நெஞ்சில் தோன்றும்.

ஆதிகாலத்தில் பூர்வ ஜென்மத்தில் நாம் நான்கு கால்களால் தானே நடந்தோம். அதே போலத் தவழ்ந்து சென்றே பாதாள விநாயகரைத் தரிசிக்க முடியும். சுமார் அறுபது அடி தூரம் பணிந்து குனிந்து தவழ்ந்து சென்றால் நமது ஆணவம் குறையும். பணிவினால் உயர்வு கிடைக்கும். சிரமத்தை நாமாகவே மனமுவந்து ஏற்றுக் கொள்வதால் அடுத்து இன்பமே மலரும். பாவத்தைக் குறைத்துப் புண்ணியத்தைக் கூட்டிக் கொள்ளப் பாதாள விநாயகர் தரிசனம், பரமபத விளையாட்டில் ஏணிகள் மட்டுமே இருந்து உயர்த்தி விடுவதைப் போல வாழ்க்கையில் மேன்மையைத் தரும்.

பாதாள விநாயகர் தும்பிக்கையை உயர்த்தி ஆசீர்வாதம் செய்யும் திருக்கோலத்தில் அமைக்கப்பட்டிருப்பது மேலும் மன மகிழ்ச்சியைக் கூட்டுகிறது.

Koviloor Digital Library



இதயக் கோயிலே தியான மண்டபம்

மனிதன் தன் மனத்துக்குள் இறைவனுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்பதற்குத்தான் மனித வடிவத்திற்கு ஒப்பாகக் கோயிலைக் கட்டி வழிகாட்டினர்.

புறச் சடங்குகளில் பெரும் ஈடுபாடு கொண்ட மனிதன், அகச் சடங்காகத் தன் இதயத்துக்குள் கோயில் கட்ட முயல வேண்டும்.

நம் இதயத்திற்குள் முதலில் ஆத்ம லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். பிறகு அருட்பெருஞ் ஜோதியை - தனிப் பெருங் கருணையைக் காணவேண்டும்.

ஆயிரக் கணக்கான பெயர்களை இட்டு நாம் ஆண்டவனை வழிபட்டாலும், அவருக்கு எத்தனையோ தத்துவ விளக்க உருவங்களைக் கண்டாலும், உண்மையில் இறைவனுக்கென்று எந்தப் பெயரும் இல்லை; உருவமும் இல்லை. இயற்கை மயமாகவே இறைவன் இருக்கின்றார்.

அவ்வப்போது பக்தர்களைக் காக்க ஆண்டவன் எடுத்த அவதாரத் தோற்றங்கள் அவ்வப்போது தோன்றி மறைந்தனவே தவிர எப்போதும் இறைவனுக்கென்று நிலையான உருவம் இல்லை.

Koviloor Digital Library

பக்தி வயப்படும் பக்தர்களுக்குத் தொடக்கக் கல்வியாகவே உருவ வழிபாடு கற்பிக்கப்பட்டது. பக்தி அனுபவம் வளர வளர இறைவன் அருவ உருவமான லிங்க வடிவில் இருப்பதை உணரவேண்டும். பிறகு ஞானமார்க்கத்தில் பூரண வளர்ச்சி பெற்ற ஆன்மா எந்த வடிவும் இல்லாத அருட்பெரும் ஜோதியாகவே இறைவன் ஒளிர்வதை எண்குணத்தானாக மிளிர்வதை மனதார உணர வேண்டும். இந்தப் பரிபக்குவ நிலையே தியானத்தின் உச்சநிலையாகும்.

இதையே பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் மிக அழகாகக் கூறுவார். வீடு கட்டும் போது மூங்கில்களைக் கட்டிச் சாரம் போடுகிறோம். வீடு கட்டி முடித்ததும் சாரத்தைப் பிரித்து விடுகிறோம். அதே போலவே ஆரம்ப நிலையில் பக்தர்களுக்கு இறைவன் மீது ஒரு பற்றுதல் தோன்றுவதற்காக உருவ வழிபாடு தேவை. அதற்கு நம் இந்துமதம் அள்ளிக் கொடுத்திருப்பதைப் போன்ற ஆயிரக் கணக்கான உருவ வழிபாட்டுச் சிற்பங்களை வேறு எந்த மதமும் அள்ளிக் கொடுத்ததில்லை. பிறகு பக்தி உணர்வில் வளர்ந்த பிறகு, உருவமில்லாத இயற்கை வழிபாட்டையே மேற்கொள்ள வேண்டும் என்பார்.

இதனால் மனக்கோயிலின் மகோன்னதமான சிறப்பு நன்கு தெரிய வரும்.

உள்ளம் பெரும் கோவில்
ஊன் உடம்பு ஆலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச்
சித்தம் சிவலிங்கம்
வள்ளல் பிரானுக்கு
வாய் கோபுர வாசல்
கள்ளப் புலன் ஐந்தும்
காளா மணிவிளக்கே!

எனத் திருமூலர் பாடியது எவ்வளவு சத்தியமான மெய்ஞானம்!

இதே மெய்ஞானத்தால் தான் பூசலார் நாயனார் இதயத்தில் கோயில்கட்டினார். அந்தக் கோயிலின் கும்பாபிஷேகத்திற்கே இறைவன் முதல் மரியாதை கொடுத்து அருள்புரிந்தார். சோழ மன்னன் கட்டிய பெருங்கோயிலுக்கு இரண்டாவதாகவே சென்றார்.

நாமும் நம் உள்ளத்தில் கோயில் கட்டுவதற்காகவே தியானம் பயிலவேண்டும். ஞான யோக தியான முறையினை முழுமையாகக் கற்றுக் கொள்ளவும் இறைமயமான இயற்கை ஆற்றலை முழுமையாக உணர்ந்து கொள்ளவும் இத்தியானப் பயிற்சி மிகவும் உதவும். இந்த உயர்ந்த

Koviloor Digital Library

நோக்கத்திற்காகவே ஸ்ரீ கற்பக விநாயகர் தவம் செய்து வழிகாட்டும் திருத்தலத்தில், பஞ்சபாண்டவர்கள் தவம் செய்த மலைச் சாரலில், தியான மண்டப இலக்கணப்படி எட்டுப் பட்டைப் பிரமிடு வடிவத்தில் எண்குணத்தானான இறைவனை உணர்ந்து தியானம் கற்க, ஒரு தியான மண்டபத்தை அமைத்துள்ளனர் தெய்வம் அற்புத உலகத்தில்!

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் குரு பரம்பரையைச் சேர்ந்த பாபாஜி டாக்டர் ராமையா அவர்கள் இத் தியான மண்டபத்தை மிகவும் பாராட்டியுள்ளார்கள்

மன ஒருமைப்பாடின்றித் தவித்த வெளி நாட்டவர்கள் பலரும் இங்கு மணிக் கணக்கில் தியானம் செய்கின்றனர்.

கல்வியில் முதலிடம், தொழிலில் வெற்றி, திருமணப்பேறு, பிள்ளைப்பேறு, நோயற்ற வாழ்வு, நிம்மதியான வாழ்க்கை ஆகியனவற்றைப் பெறுவதற்காக இங்குவந்து தியானம் கற்றுக் கொண்ட அனைவருக்கும் நினைத்தவரம் கிடைத்துள்ளது.

நிம்மதி வேண்டுமா? நிறைவு வேண்டுமா? நினைத்தவை யாவும் பெறக் கடவுளின் பிள்ளைகளான நமக்குப் பூரண உரிமை இருக்கிறது. எல்லோரும் எல்லாமும் பெறுவதற்கு உதவும் இனிய எளிய இறை வழிப் பாதையே ஞான யோக தியானம். அதை முழுமையாகப் பெற்றுத் தருவதோடு, நிம்மதியான வீடுபேற்றினையும் அடைய உதவுவதே தெய்வம் அற்புத உலகம்.



Koviloor Digital Library



கூடுதல் சிறப்புக்கள்

தெய்வம் அற்புத உலகம், எது மாதிரியும் இல்லாத ஒரு புது மாதிரியான உலகம். வேறு எங்கும் கிடைத்தற்கு அரிதான நிம்மதிப் பெருஞ் செல்வத்தை அள்ளித் தருவதற்காக இது அமைக்கப்பட்டது.

அதனாலேயே தெய்வ அருள் சுரக்கும் பஞ்சபாண்டவர் தபசு மலைச் சாரலில் கட்டப்பட்டுள்ளது.

தியான மண்டபம் அமைந்துள்ள இடத்தில் முன்பு பெரிய பாம்புப் புற்று இருந்தது. அதனுள் குபேரன் கையிலிருக்கும் உடும்பின் முட்டைகள் இருந்தன. இந்தத் தெய்வீக அமைப்பினை வாஸ்து சாஸ்திரம் புகழ்ந்து கூறுகிறது.

இங்கு வருவோருக்கெல்லாம் செல்வ வளமும் நிம்மதியும் நிச்சயமாகக் கிடைக்கிறது.

மன நிம்மதிக்காகவே இங்கு பலரும் வந்து தங்குகின்றனர். அவர்கள் இன்ப மயமாக நிம்மதியை அனுபவிப்பதற்காகவே செட்டி நாட்டு உணவு வகைகளை வழங்கும் ஹோட்டலையும், நிறைவான சுகத்தைத் தரும் லாட்ஜையும் கட்டியுள்ளனர்.

ஒன்பது நகரக் கோயில்கள் பற்றிய விளக்கங்கள், வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய விளக்கப் படங்கள் அருங்காட்சியகத்தை அழகுபடுத்துகின்றன.

Koviloor Digital Library

குழந்தைகள், பெரியவர்கள் மனம் மகிழ நூதனமான பல விளையாட்டுக்கள் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நீச்சல்குளம், வீடியோ கேம்ஸ் ஆகிய கூடுதல் வசதிகளும் இங்கு மன மகிழ்ச்சிக்காகவும் அதிவேக அறிவு வளர்ச்சிக்காவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சவாலுக்கு சவால் எனப் பலரும் போட்டியிட்டு அறிவினையும் பொறுமையையும் வளர்த்துக் கொண்டு கோடீஸ்வரராக உயருவதற்கான சாதனைகளைச் சொல்லித்தரும் விளையாட்டுகளும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆன்மீக அடிப்படையில், வழிபாடு பற்றிய அனைத்துக் கேள்விகளுக்கும் இங்கு அறிவியல் பூர்வமான விடை கிடைக்கிறது.

காஞ்சிப் பெரியவர்கள், கவியரசு கண்ணதாசன், குன்றக்குடி அடிகளார் ஆகியோருடைய பாணியில் எளிமையான இனிமையான அர்த்தமுள்ள இந்து மத விளக்கங்கள் சொல்லப்படுகின்றன.

இயற்கை மயமாக இருக்கும் இறைவனை மனத்திற்குள் கோயில் கட்டி வழிபடும் மந்திர வித்தையை மிக எளிமையாக ஞானயோக தியானப் பயிற்சி வகுப்பில் கற்பிக்கின்றனர்.

தெய்வத்தை நேரில் பார்த்த நிறைவும் மகிழ்ச்சியும் முழுமையாகத் தெய்வம் அற்புத உலகத்தில் கிடைக்கிறது.

உண்மையில் இது ஒரு அற்புதமே!



Koviloor Digital Library

ANDAVAR
A. No 15529
KOVILOOR

Koviloor Digital Library

தெய்வம் ஒண்டர் லேண்ட், வயிரவன்பட்டி ஆர்ச் சமீபம், பிள்ளையார்பட்டி - 630 207.